
JESUS REDEEMS MINISTRIES
ஊழியர்
உலகம்
Volume: 16 | Issue: 08 | October 2025 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹100 | Single Copy: ₹10
உன் பட்டணத்தின் காவலாளி நீ; அதனால் ஆவியில்
அனலாயிரு

# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

## உள்ளே...

04 

16 

22 

32 

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.



அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
**Phone: 04639-353333 | Cell:9750955547**
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com



# தலைவாசல்

## எனக்குப் பிரியமான வாலிபர்களே,
## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

நீங்கள் தேவனுடைய பார்வையில் மிகவும் விசேஷமானவர்கள். தேவன் உங்களை மிகவும் நேசிக்கிறார். பலர் ஆண்டவருக்காக வைராக்கியமாய் செயல்படுவதைப் பார்த்துத் தேவனைத் துதிக்கிறேன். ஆனால் வாலிபர்களாகிய நீங்கள் பவுல் சொல்வதைப் போல் ஆவியில் அனலுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

கடந்த நாட்களில் தமிழ்நாட்டின் சில மாவட்டங்களில் வாலிபர் சேனை எழும்பிக் கர்த்தருக்காக வைராக்கியம் பாராட்டுகிற எலியாவாய், தானியேலாய் தங்களை அர்ப்பணித்துப் புறப்பட்டுச் சென்றதைப் பார்த்து, என் தேவனை துதித்தேன். தேவன் வாக்குக் கொடுத்தபடியே ஆங்காங்கே வாலிபர் சேனையை எழுப்பி பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

எழும்பிய நீங்கள், கவனமாய், சீராய் உங்கள் விசுவாச வாழ்க்கையை வெற்றியாய் ஓட வேண்டும். **ஆவியில் ஆரம்பித்த பலர், மாம்சத்தில் முடித்துவிட்டார்கள்.** ஆனால் **கடைசிக்கால வாலிபர்களாகிய நீங்கள் எலியாவின் ஆவியை உடையவர்கள்**. எலியா ஆவியில் அனல் உள்ளவராய் இருந்து, ஆகாபுக்கு முன்பாக நின்று, என் வார்த்தையே அன்றி மழையும் பெய்யாது, பனியும் பெய்யாது என்று வைராக்கியமாய் சவால் விட்ட தேவ மனிதன். இன்றைக்கும் என் **தேவனுக்காக அனலாய் எழும்புகிற ஒரு வாலிப சேனை தேவை.** இஸ்ரவேலின் தேவனே மெய்யான தேவன் என்று நிரூபிக்கிற எலியாக்கள் எழும்ப வேண்டும்!

**வேதத்தில் தேவனை மறுதலித்து முதுகு காட்டின இஸ்ரவேல் ஜனத்தை, வானத்திலிருந்து அக்கினியை இறக்கி, தேவனுக்கு முன்பாக முகங்குப்புற விழும் ஜனமாக மனம்திரும்ப வல்லமையான சுவிசேஷ ஊழியத்தை செய்தவர் எலியா!**

இனி உங்கள் சுவிசேஷ ஊழியத்தில் ''கர்த்தரே தேவன்'' என்று ஆதி அப்போஸ்தலர்களைப் போன்று நிரூபிக்கிற ஊழியத்தை அற்புதங்களோடும் அடையாளங்களோடும் செய்ய வேண்டும். **அப்படி தேவன் உங்களைப் பயன்படுத்த வேண்டுமென்றால் எப்பொழுதும் நீங்கள் ஆவியில் அனலாய் இருக்க வேண்டும்.** தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் கடைசிக்கால எலியாக்களாய் எழுப்பிப் பயன்படுத்துவாராக!

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**

சாட்சி தொகுப்பு: ஆக்னஸ்



# உண்மை அன்பு உயர்த்தியது!

*ஏரல் தாலுகாவில் உள்ள ஒரு கிராமத்தில் இருக்கும் சகோதரி கிரேஸ்லின் வீட்டிற்கு காலையில் சென்றபோது, கிராம மக்கள் மிகவும் அன்புடன் வரவேற்று, கிரேஸ்லின் வீட்டிற்கே அழைத்துச் சென்றார்கள். கிராமத்து பாரம்பரிய விருந்தோம்பல், பெரிய டம்ளரில் புகைபறக்கும் காஃபியுடன் எங்களை வரவேற்ற கிரேஸ்லின் மற்றும் அவரது குடும்பத்தினரின் முகம் மகிழ்ச்சியில் மலர்ந்தது. அந்த உஷ்ணத்தையும் அன்பையும் சுவைத்தபடியே, அவருடன் ஒரு அருமையான நேர்காணலைப் பதிவு செய்தோம். அந்த உரையாடலை உங்கள் விசுவாசத்தை பெலப்படுத்தும் விதமாகப் பகிர விரும்புகிறோம். இந்தக் சாட்சியின் மூலம் ஆண்டவர் உங்களைத் தொடுவார் என்றால், எங்களுக்குத் தெரியப்படுத்த மறவாதீர்கள்!*

## உங்களதுக் குடும்பம் மற்றும் உங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்?

நான் தூத்துக்குடி மாவட்டம் ஏரல் தாலுகாவில் உள்ள ஒரு கிராமத்தில் பிறந்து வளர்ந்தேன். நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும், பெயர் கிறிஸ்தவளாகத் தான் வாழ்ந்து வந்தேன். 2019ஆம் ஆண்டு என் பள்ளிப் படிப்பை முடித்தேன். அதுவரைக்கும் எனக்கும் இயேசுவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நான் கிறிஸ்தவக் கும்பத்தில் பிறந்திருந்தாலும், என் மனம்போன போக்கில் தான் வாழ்ந்து வாழ்ந்தேன். எனக்கு ஒரு மூத்த சகோதரி இருக்கிறார்கள். நான் எனது அம்மா அப்பாவுடன் வசித்து வருகிறேன். எனக்கு அக்காவின் அன்பு கிடைத்தாலும், அண்ணன் இருந்தால் நன்றாக இருக்குமே என்ற ஏக்கம்



# இனிமேல் எனக்கு உலக அன்புத் தேவையில்லை, இயேசு எனக்குப் போதும்!



எப்போதும் எனக்குள் இருந்தது. அண்ணன் என்ற உறவு எனக்கு ரொம்ப பிடிக்கும். அதனால் என் உறவு அண்ணன்களை என் சொந்த சகோதரர்களைப் போல, எப்போதும் எனக்கும் உதவியாக இருப்பார்கள் என்று நினைத்து மிகவும் நேசித்தேன். ஆனால் நான் +2 முடித்தபோது, அந்த நம்பிக்கை எல்லாமே சுக்கு நூறாகிப் போனது. அவர்கள் பேசிய வார்த்தைகள் என் இருதயத்தை நொறுக்கியது. எல்லோருடைய அன்பும் மாயை என்று அப்போது தான் என்னால் புரிந்துக்கொள்ள முடிந்தது.

## நீங்கள் அண்ணனைப் போல் நேசித்தவர்கள் உங்களைக் காயப்படுத்தி விட்டார்கள்... அந்தக் காயத்தை ஆற்ற வேறு உறவு கிடைத்ததா?

நான் மிகவும் காயப்பட்டபோது தான், ஆண்டவரிடத்தில் போய், "அண்ணனாக நான் நேசித்தவர்கள் என்னைக் காயப்படுத்தி விட்டார்களே" என்று மிகவும் அழுதேன். "இயேசுவே இந்த உலகமே மாயை, மனிதர்கள் ஆதாயத்திற்காகத்தான் நேசிக்கிறார்கள், ஆனால் உண்மையான அன்பை கொடுக்கும் உம்மை நான் மறந்து விட்டேன். இனிமேல் எனக்கு உலக அன்புத் தேவையில்லை, நீர் எனக்குப் போதும்" என்று ஒப்புக்கொடுத்து ஜெபித்தபோது, நான் செய்த பாவங்களை இயேசு எனக்கு ஞாபகப்படுத்தி அர்ப்பணித்து ஜெபிக்க வைத்தார். "இத்தனை வருடங்களை வீணாக்கி விட்டேன், பாவங்கள் செய்து உம்மைத் துக்கப்படுத்தி விட்டேன்" என்று என் பாவத்தை முழுவதுமாக அறிக்கையிட்டு ஒப்புக் கொடுத்து, மே 19, 2019 அன்று இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, என் வாழ்க்கையை முழுமையாக அவருக்கென்று ஒப்புக் கொடுத்தேன். அன்றைக்குத்தான் நான் இரட்சிக்கப்பட்டேன். அன்று முதல் எனக்கு ஒரு அண்ணனாக இயேசு இருந்து நடத்தி வருகிறார்.

## சூப்பர்... இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டீர்கள்... அதன்பிறகு இயேசுவுடனான உங்கள் உறவு எப்படி இருந்தது?

அதுவரை என் ஜெப நேரம் 5 நிமிடமாகவே இருந்தது. தேசத்திற்காக, அழிந்து போகிற மக்களுக்காக, எழுப்புதலுக்காக ஜெபிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியாது. அப்போது தான் lockdown வந்தது. ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சிமூலம் எதற்காக, எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதை கற்றுக் கொண்டேன். அதிலிருந்து என் ஜெப நேரம் அதிகமானது. எனக்கு அபிஷேகம் பெற வேண்டும் என்ற ஆசை இருந்தது. அதனால் அதற்காகவும் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். நான் இரட்சிக்கப்பட்ட பிறகு வேதத்தை வாசித்துத் தியானிக்க ஆரம்பித்தேன். கர்த்தருடைய வார்த்தை களிமண்ணாகிய என்னை ஒவ்வொரு நாளும் உருவாக்கியது. கர்த்தருடைய வார்த்தையை வாசிக்க வாசிக்க, நான் எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக் கூடாது என்பதைக் கற்றுக் கொண்டேன். வேதத்தைப் படிக்கப் படிக்க அதன் மீது



மிகுந்த ஆர்வம் உண்டாகியது. நான் கவலையோடு இருந்தபோது, என் கண்ணீரை துடைத்ததும் வேதம் தான்; என்னை வழிநடத்தியதும் வேதம் தான். நான் இயேசுவை அதிகமாக ருசிக்க ஆரம்பித்தேன்.




## சரி... ஜெபிக்கக் கற்றுக்கொண்டு இயேசுவை அதிகமாக ருசிக்க ஆரம்பித்தீர்கள்... நீங்கள் ஆவலோடு வாஞ்சித்த அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டீர்களா?

ஆம். Igniters Campல் கலந்து கொண்டபோது, கர்த்தர் என்னை அபிஷேகித்தார். அந்நிய பாஷையைத் தந்து, யுத்த அபிஷேகத்தினாலும் சுவிசேஷ அபிஷேகத்தினாலும் நிரப்பினார். கொரோனா காலத்தில் நான் அதிக நேரம் இயேசுவோடு செலவழித்தேன். மிகவும் சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தேன். நான் தேவனோடும், அவர் என்னோடும் பேசுகிற அனுபவம் எனக்கு மிகுந்த ஆனந்தத்தைத் தந்தது. இயேசுவை ஏற்றுக்கொண்ட பிறகு என் பாவ சுபாவங்கள் மாறி, புதிய மனுஷியாக மாறினேன்.

## சூப்பர்... கர்த்தர் உங்களை அபிஷேகித்தார்...! 12ஆம் வகுப்புடன் உங்கள் படிப்பை முடித்துக் கொண்டீர்களா?

இல்லை... 12ஆம் வகுப்பு படித்து முடித்து NEET படிக்க வேண்டும் என்று முயற்சித்து கிடைக்கவில்லை. Nursing படிக்க முயன்று அதற்கு நிறைய பீஸ் கட்ட வேண்டும் என்பதால் அதற்கும் போகவில்லை. நான் என்ன படிக்க வேண்டும் என்று ஜெபித்துக் கொண்டிருந்தேன். ஆகஸ்ட் மாதம் வந்தபோது தான் எனக்குள் ஒரு பயம் வந்தது. ஒரு வருடம் வீணாகிவிடுமோ என்று எண்ணி, எங்கள் ஊரில் உள்ள கல்லூரியில் B.SC Maths எடுத்துப் படிக்கலாம் என்று கேட்டபோது, அட்மிஷன் முடிந்தது என்று சொன்னார்கள். அதே கல்லூரியில் Engineeringல் 2 சீட் இருப்பதாகச் சொன்னார்கள். Fees எவ்வளவு என்று கேட்கும்போது ஒரு வருடத்திற்கு 30,000 ரூபாய் கட்ட வேண்டும், இது தவிர பஸ் fees என்று சொன்னார்கள்.

என் வீட்டில் அப்பா மட்டும் தான் வேலைக்குப் போய்ச் சம்பாதிப்பதால் எப்படி இவ்வளவு பீஸ் கட்டி படிக்க வைக்க முடியும் என்று, "இயேசப்பா எங்களால் இவ்வளவு பீஸ் கட்ட முடியாதே" என்று சொல்லி அழுது கொண்டிருந்தேன். நான் ஜெபிக்கவில்லை, 4 வருடத்திற்கு நிறைய ரூபாய் ஆகுமே என்று இயேசப்பாவிடம் பேசிக்கொண்டு தான் இருந்தேன்.

அந்த நேரத்தில் கல்லூரியிலிருந்து போன் வந்தது. நீங்கள் 500க்கு மேல் மதிப்பெண் எடுத்திருப்பதால், எந்தக் கட்டணமும் செலுத்த வேண்டாம், வெறும் பஸ் fees மட்டும் கட்டினால் போதும், உடனே கல்லூரியில் வந்து சேருங்கள் என்று சொன்னார்கள்.

என் சந்தோஷத்திற்கு அளவே இல்லை. நான் அட்மிஷன் போகும்போது, principal மேடம் என்னுடைய mark-sheetஐ பார்த்தார்கள். அப்போது எதுவும் சொல்லவில்லை, ஆனால் நான் இயேசுவிடம் சொல்லி முடிப்பதற்குள் என் தேவையை அறிந்து, எனக்கு என் அண்ணன்



*தோல்வியையே சந்தித்த எனக்கு அவரைப் பற்றிக்கொண்டபோது தேவன் பல வெற்றிகளைத் தந்து உயர்த்தி வைத்தார்.*

இருந்து செய்வதை விட மிகச் சிறப்பாகச் செய்து என் படிப்பை முடிக்கத் தேவன் உதவி செய்தார்.

### அல்லேலூயா...! எவ்வளவு பெரிய ஆச்சரியம்...! கர்த்தர் இவ்வளவு பெரிய அற்புதம் செய்தபிறகு உங்கள் படிப்பு எப்படி போனது?

நான் தமிழ் medium படித்துவிட்டு சென்றதால், BE படிக்கக் கல்லூரியில் சேர்ந்தபோது எனக்கு ஆங்கிலம் மிகவும் கடினமாக இருந்தது. நான் கர்த்தரிடத்தில் ஞானத்தைக் கேட்டபோது, சாலமோனுக்கு கொடுத்த ஞானத்தை தருவேன் என்று வாக்குக் கொடுத்தார். அதேபோல் கர்த்தர் எனக்கு ஞானத்தைக் கொடுத்து, அநேக Medals மற்றும் shields வாங்க உதவி செய்தார். Departmentல் 2nd rank எடுக்கவும் தேவன் கிருபை செய்தார். கடைசி செமஸ்டரில் Project செய்ய, என்னை Team leaderஆக நியமித்தார்கள். எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை. கர்த்தரிடத்தில் கேட்டு ஜெபித்தபோது அதிசயமாக என்னை வழிநடத்தி, Best Paper Presentation என்ற Award வாங்கவும் தேவன் எனக்கு உதவி செய்தார். தோல்வியையே சந்தித்த எனக்கு அவரைப் பற்றிக்கொண்டபோது தேவன் பல வெற்றிகளைத் தந்து உயர்த்தி வைத்தார்.



### சரி... தேவன் உங்களுக்குப் படிப்பில் சாதிக்க உதவி செய்திருக்கிறார்... எத்தனையோ அற்புதங்களைச் செய்திருக்கிறார்... இவ்வளவு நன்மை செய்த தேவனுக்காக நீங்கள் என்ன செய்தீர்கள்?

Igniters campக்கு சென்றபோது எல்லோரும் ஊழியம் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதுமட்டுமல்லாமல், அந்த முகாமில் தேவன் எனக்குச் சுவிசேஷ அபிஷேகமும் கொடுத்திருந்தார். படித்துக் கொண்டிருக்கும் போதே ஊழியம் செய்யலாம் என்பதை மோகன் uncle சொல்லிக் கொடுத்தார்கள். எனக்குச் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்ற ஆர்வமும் பாரமும் இருந்தது. ஆனால் யுத்தம் (பிசாசோடு) பண்ணவோ, சுவிசேஷம் அறிவிக்கவோ தைரியம் இல்லை. நான் எல்லாவற்றிற்கும் மிகவும் பயப்படுவேன். ஆனால் கர்த்தர் என்னை அதற்கென்று உருவாக்கிப் பழக்குவித்தார். எனக்கு சுவிசேஷம் அறிவிக்க வெளியே போகப் பயமாக இருந்ததால், கர்த்தர் என் மொபைல் போனை வைத்து



**கர்த்தர் என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை மட்டுமல்ல, உலகப் பிரகாரமாகவும் ஆசீர்வதித்து வைத்திருக்கிறார்.**

சுவிசேஷம் அறிவிக்க உதவி செய்தார். தினமும் காலையில் என்னுடைய தனிப்பட்ட ஜெபத்தில் கர்த்தர் என்னோடு பேசும் வசனத்தை எனது வாட்ஸ்அப் Statusஇல் வைத்து, "இயேசப்பா நான் வைக்கிற இந்த வசனத்தைப் பார்த்து ஒரு ஆத்துமாவாவது இரட்சிக்கப்பட வேண்டும்" என்று ஜெபித்து வைப்பேன். அதன் விளைவாக எனது தமிழ் ஆசிரியர் இந்த வார்த்தைகளை வாசித்து இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். அதேபோலக் கர்த்தரை அறியாத என் நண்பர்களும் இந்த வார்த்தை என்னோடு பேசியது என்று சொல்லுவார்கள். இதன் மூலம் சுவிசேஷம் அறிவித்து வந்தேன். அதன்பிறகு குழுவாகச் சென்று நாங்கள் சுவிசேஷம் அறிவித்து வருகிறோம். இதன் நிமித்தம் கர்த்தர் என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை மட்டுமல்ல, உலகப் பிரகாரமாகவும் ஆசீர்வதித்து வைத்திருக்கிறார்.






## வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

வாலிபர்களாகிய நீங்கள் எல்லோரிடம் அன்பு செலுத்துங்கள், ஆனால் யாரையும் நம்பாதீர்கள். இயேசு மட்டுமே என்றைக்கும் நம்பிக்கைக்குரியவர். உங்களுக்கு அம்மா, அப்பா, நண்பர்கள் கூட இல்லாமல் இருக்கலாம், ஆனால் கர்த்தர் உங்களுக்கு அம்மாவாக, அப்பாவாக, நண்பராக எல்லாமுமாக இருப்பார் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. எப்பேர்ப்பட்ட பாவமாக இருந்தாலும், இயேசுவிடம் வரும்போது அவர் உங்களைப் பரிசுத்தமாக்குவார். எந்த ஒரு காரியமாக இருந்தாலும், முதலாவது கர்த்தரிடத்தில் சொல்லி ஜெபம் செய்யுங்கள். வேதத்தை நேசியுங்கள். வேதம் வாசிப்பதை நிறுத்தி விடாதீர்கள். வேதம் உங்களைச் சரியான பாதையில் நடத்தும்.

**அன்பான வாலிபர்களே! எல்லோரும் இயேசுவை அம்மாவாக அப்பாவாக ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் சகோதரி கிரேஸ்லின் தங்கம் இயேசுவை தனது அண்ணனாகவே எல்லாவற்றிலும் வைத்திருந்தார். ஒருவேளை நீங்களும் கூட நீங்கள் விரும்பும் உறவு எனக்கு இல்லையே என்று கவலைப்படாதிருங்கள். இயேசு உங்களுக்கு எல்லாவற்றிலும் உதவி செய்யும் அண்ணனாக இருப்பார். அவரை எப்பொழுதும் உங்களுக்கு முன்பாக நிறுத்தி வையுங்கள். அவர் உங்கள் வலது பாரிசத்தில் இருக்கும்போது நீங்கள் அசைக்கப்படமாட்டீர்கள்.**

இயேசு விடுவிக்கிறார்

# வாலிபர் உலகம்

தொலைக்காட்சி நிகழ்ச்சி

சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும்
பார்க்கலாம்.

விரைவில்... "Empowering the Young Lions"
என்ற புதிய ஆங்கில நிகழ்ச்சி வெளிவர இருக்கிறது.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!

9750955547

LIVE
STREAMING
Revival
IGNITERS
SUNDAY 26th OCT.
Time: 3:00 PM - 5:00 pm

IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON THE LAST SUNDAY OF EVERY MONTH





# வாலிபர் எழுப்புதல் கூடுகை

கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் வள்ளியூர், திசையன்விளை, சென்னை - ராமாபுரம், ஆந்திரா மாநிலம் சித்தூர் மற்றும் திருச்சியில் நடைபெற்ற வாலிபர் எழுப்புதல் கூடுகைகளில் சுமார் 951 வாலிபர்களைக் கர்த்தர் அழைத்து வந்து, எழுப்புதல் அக்கினியை அளவில்லாமல் ஊற்றினார். பெற்றுக் கொண்ட அக்கினி அபிஷேகத்தை அவர்கள் படிக்கிற, வேலை செய்கிற இடங்களில் பரவச் செய்கிறவர்களாக ஒவ்வொருவரையும் தேவன் அபிஷேகித்து அனுப்பினார். வந்திருந்த வாலிபர்கள் வல்லமை வரங்களைப் பெற்று புதிய தீர்மானங்களை எடுத்துக் கடந்து சென்றிருக்கின்றனர். கர்த்தர் ஊழியர்களை வல்லமையாகப் பயன்படுத்தினார். தேவனுக்கே மகிமை!



# எழும்பிப் பிரகாசி!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். ஒவ்வொரு மதமும் தம்முடைய வார்த்தையினால் உங்களைப் பலப்படுத்தித் தைரியப்படுத்தி வருகிற தேவன், இம்மாதம் உங்களைப் பார்த்து "என் மக(னே)ளே, உன் ஒளி வந்தது! என் வெளிச்சத்தை நான் உனக்குத் தந்திருக்கிறேன்!" என்ற வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார். அதே சமயத்தில், "நீ எழும்பிப் பிரகாசிக்க வேண்டும்" என்கிற ஒரு கட்டளையையும் உங்களுக்குக் கொடுக்கிறார்.



செய்தி: மோகன் சி. லாசரஸ்

*இன்றைக்கு நாம் எல்லோரும் இருள்சூழ்ந்த காலத்துக்குள்ளாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு நாளும் மரணங்கள்! கொலைகள்! இரத்தம் சிந்துதல்கள்! யுத்தங்கள்! பஞ்சங்கள்! கொள்ளை நோய்கள் என, எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்நாட்களில் தேசங்களில் தீமையான காரியங்கள் பெருகிக் கொண்டிருக்கிறதை நாம் பார்க்கிறோம்.*

பிசாசானவன், தனக்கு இன்னும் கொஞ்ச காலம்தான் இருக்கிறது (வெளி. 12:12) என்பதை அறிந்து, பூமியில் இறங்கி, மிகுந்த கோபத்தோடு மனுக்குலத்துக்கு விரோதமாகப் பலவிதமான தீமையான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறான்.

தேசமெங்கும் இருக்கும் இருளின் கிரியைகளை வெளிச்சத்தினால் மட்டுமே ஜெயிக்க முடியும். அதனால்தான் இயேசு கிறிஸ்து, **"நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்"** (யோவான் 9:5). மரண இருளில் இருக்கிறவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுப்பதற்காக, வெளிச்சமாகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்தார். இன்றைக்கு அந்த வெளிச்சமாகிய இயேசுவை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களானால், உங்களுடைய இருளான வாழ்க்கை வெளிச்சமாக மாறி விடும். அந்த வெளிச்சம் உங்கள் மூலமாக மற்றவர்கள் மத்தியில் பிரகாசிக்க வேண்டும்" என்று கர்த்தர் விரும்புகிறார்.

### நாம் என்னென்ன விதங்களில் வெளிச்சம் கொடுக்க முடியும்?

### 'நற்கிரியை' என்கிற வெளிச்சம்!

**"மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது"** (மத்தேயு 5:16) என்று கர்த்தர் சொல்கிறார்.

உங்கள் பட்டணத்தில், நீங்கள் வசிக்கிற இடத்தில், வேலை செய்கிற இடத்தில், படிக்கிற இடத்தில், ஊழியம் செய்கிற இடத்தில், தொழில் செய்கிற இடத்தில், உங்களைச் சுற்றிலும் வசிக்கிற மக்கள் உங்களுடைய நற்கிரியைகளைப் பார்க்க வேண்டும். **நீங்கள் நற்கிரியைகள் செய்வதன் மூலமாகப் பிரகாசிப்பீர்கள்** என்பதாகக் கர்த்தர் சொல்கிறார் (மத்தேயு 5:16). அப்படி நீங்கள் நற்கிரியைகளைச் செய்யும்போது, அந்த இடத்திலிருக்கிற இருள் விலகி, ஒரு வெளிச்சம் உண்டாகும். உங்கள் நற்கிரியைகள் மூலமாக நீங்கள் அதை நிறைவேற்ற வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார்.



உங்களுடைய நல்ல சுபாவங்கள் மற்றும் நீங்கள் செய்கிற நற்கிரியைகள் மூலமாக, இயேசு கிறிஸ்துவாகிய வெளிச்சம் உங்களுக்குள் வருவதற்கு இடம் கொடுத்து, மற்றவர்கள் மத்தியில் பிரகாசிக்கிற ஒரு வாழ்க்கையை நீங்கள் வாழ வேண்டும். அப்போது உங்களைச் சுற்றிலும் இருக்கிற இருள் தானாக விலகிப் போய் விடும் என்பதாக கர்த்தர் உங்களுக்கு வாக்குக் கொடுக்கிறார்.

## பரிசுத்த ஆவியாகிய வெளிச்சம்!

**"கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு..."** (2 தெச. 2:13) என்று, கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது. ஒரு 'சிம்னி' விளக்கு எரிய வேண்டுமென்றால், விளக்கை நன்றாக சுத்தம் செய்தாலும், எண்ணெய் ஊற்றப்பட்டால் தான் அந்த விளக்கு பிரகாசமாக எரியும். இதில், 'எண்ணெய்' என்பது, பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது. எரிகிற விளக்கு, அது இருக்கிற இடத்தில் எப்படி வெளிச்சம் கொடுக்கிறதோ, அதேபோல நீங்களும் இந்த உலகத்திற்கு வெளிச்சமாக இருக்க வேண்டுமானால், அனுதினமும் அதிகாலையில் எழும்பி ஆயத்தப்பட்டு, பரிசுத்த ஆவியில் நிரம்பி ஜெபிக்க வேண்டும். அப்படி ஜெபிக்க, ஜெபிக்க, உங்களுக்குள்ளாக கர்த்தர் விரும்புகிற பரிசுத்தமும், வல்லமையும் உண்டாகும். அப்பொழுது நீங்கள் வெளிச்சமாக மாறி பிரகாசிக்க ஆரம்பிப்பீர்கள். உங்களுடைய முகத்தில் ஒரு பிரகாசம் இருக்கும். உங்கள் பேச்சு மற்றும் நடக்கைகள் எல்லாவற்றிலும் ஒரு வெளிச்சம் இருப்பதை உங்களைச் சுற்றிலும் இருக்கிற மக்களால் பார்க்க முடியும். அப்படியானால், எண்ணெயாகிய பரிசுத்த ஆவியினால் அனுதினமும் நீங்கள் நிரப்பப்பட வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. ஒருவேளை நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை இதுவரை பெற்றுக் கொள்ளாமல் இருப்பீர்களானால், அதை வாஞ்சித்து, கர்த்தரிடத்தில் ஜெபித்து பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் இந்த உலகத்திற்கு வெளிச்சமாக இருப்பீர்கள்!

## எழும்பிப் பிரகாசியுங்கள்!

**"ஒருவனும் விளக்கைக் கொளுத்தி, மறைவிடத்திலாவது, மரக்காலின் கீழேயாவது வைக்காமல், உள்ளே வருகிறவர்கள் வெளிச்சம் காணும்படி, அதை விளக்குத்தண்டின்மேல் வைப்பான்"** (லூக்கா 11:33) என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்கிறார். நாம் விளக்கை சுத்தம் பண்ணினால் மட்டும் போதாது. அந்த விளக்கைக் கொளுத்தி, அதை மூடி மறைத்து வைக்காமல், அது எல்லோருக்கும் வெளிச்சம் கொடுக்கும்படியாக, அதை சரியான இடத்தில் வைக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த விளக்கு வெளிச்சம் கொடுக்கும். அதே போலத்தான், எண்ணெயாகிய பரிசுத்த ஆவியானவர் நம்மில் ஊற்றப்பட்டு, அந்த நெருப்பு நம்மில் பற்ற வைக்கப்பட்ட பிறகு, நாம் மறைவாக இருக்காமல் எழும்பிப் பிரகாசித்து, எல்லோருக்கும் வெளிச்சம் கொடுக்க வேண்டும்.



உங்களுடைய வாழ்க்கையில் காணப்படுகிற சில பெலவீனங்களையும், குறைபாடுகளையும் வைத்து, உங்கள் வெளிச்சத்தை நீங்கள் மூடி வைத்து விடக் கூடாது. நீங்கள் விளக்குத் தண்டில் இருக்கிற விளக்காக இருந்து, மற்றவர்கள் மத்தியில் எழும்பி பிரகாசிக்க வேண்டும். அதாவது, ஒரு விளக்கைக் கொளுத்தி, அது வெளிச்சம் கொடுக்கும்படியாக அதற்குரிய விளக்குத் தண்டின் மேல்தான் அதை வைக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த விளக்கு பிரகாசித்து, அந்த இடத்திலிருக்கிற இருளைப் போக்கும். அதனால்தான் கர்த்தர் உங்களைப் பார்த்து, "என் மக(னே)ளே, நீ எழும்பிப் பிரகாசி! நீ எழும்பிப் பிரகாசித்தால், உன் வீட்டில், உன் தெருவில், உன் பட்டணத்திலிருக்கிற சாத்தானின் இருள் யாவும் நீங்கும்! உனக்கு விரோதமாகப் போராடுகிற பிசாசின் கிரியைகள் யாவும் முற்றிலுமாக அழிக்கப்படும்! என்று உங்களை உற்சாகப்படுத்துகிறார்.

*எனக்கு அன்பான வாலிப மகனே, மகளே! வெளிச்சம் கொடுக்கிற இயேசு கிறிஸ்து இன்றைக்கு உங்களுடைய வாழ்க்கையில் வந்திருக்கிறாரா? அவரை நீங்கள் உங்கள் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டு இருக்கிறீர்களா? சற்று யோசித்துப் பாருங்கள். ஒருவேளை நீங்கள் அவரை ஏற்றுக் கொண்டிருந்தாலும், உங்களைச் சுற்றிலும் இருளாகிய ஏதாவது கரும் புகை (அழுக்கு) உங்களை மூடி இருக்கிறதா? அப்படி ஏதாவது இருக்குமானால், முதலாவது அதை சரிசெய்து கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் நிச்சயம் எழும்பி பிரகாசிக்க முடியும்..!*



# அனலாயிரு!!

முகப்பு செய்தி: சதீஷ்

**இன்றைக்கு ஆண்டவருக்காக எரிந்துப் பிரகாசிக்க வேண்டிய வாலிபர்கள் அனலுமின்றி குளிருமின்றி வெதுவெதுப்பான வாழ்க்கையே வாழ்கின்றனர். நாம் ஏதோ மனம்போன வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற்காக இயேசு இரத்தத்தை சிந்தவில்லை. நாம் அவருக்குள் வாழ வேண்டும் என்பதற்காகவே அவருடைய விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்பட்டது. நாம் உலகத்திற்கும் வாழ்ந்து கொண்டு, கிறிஸ்துவுக்கும் வாழ்ந்து கொண்டிருப்பதற்காக அல்ல, இயேசுவுக்காக வாழவே, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய இரத்தம் சிந்தப்பட்டது.**

யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை நோக்கிக் ''கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய் கண்டால், பின்னை யாரை சேவிப்பீர்கள்'' என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள். நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்தின் குடிகளாகிய ஏமோரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்றான். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய சொந்த ஜனம் தான். ஆனாலும் அவர்கள் வழிவிலகி வேறு தேவர்களைச் சேவித்தார்கள். இப்போது தேவனுக்காக யோசுவா வைராக்கியமாய் எழுந்து, இந்த வார்த்தைகளை அந்த ஜனத்திற்கு சொன்னார். இயேசுவும் வேண்டும் உலகமும் வேண்டும் என்று இரட்டை வாழ்க்கை நீங்கள் வாழ முடியாது. கர்த்தருக்கென்று வைராக்கியமாய் இருக்க வேண்டும்.



இன்றைக்கு ஆண்டவருடைய பிள்ளைகளாகிய நாம் யோசுவாவைப் போல வைராக்கியமாகக் கர்த்தரை பற்றிக் கொண்டிருந்தால் இன்று இந்திய தேசமே இயேசுவை அறிந்திருக்கும். ஆனால் பெரும்பாலானவர்கள் உலகத்தையும் விட முடியாமல், இயேசுவையும் விடமுடியாமல் இருப்பதால் இருளான உலகில் பிரகாசிக்க

முடியவில்லை. இஸ்ரவேலில் எப்பொழுதெல்லாம் நல்ல தலைவர்கள் இருந்தனரோ அப்பொழுதெல்லாம் ஜனங்கள் கர்த்தரை முழு மனதோடு பின்பற்றினர். அவர்களை வழிநடத்த சரியான இராஜாக்கள் இல்லாதபோது ஜனங்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்து வந்தார்கள். தேவன் அவர்களுக்கு எவ்வளவு நன்மைகளும் அற்புதங்களும் செய்தாலும், அவற்றை மறந்து கர்த்தரை விட்டுப் பின்வாங்கிச் சென்றனர்.



அனலுமின்றி குளிருமின்றி அவர்கள் வாழ்ந்தபடியால் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானானுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. அனலாய் இருந்த யோசுவா கானானுக்குள் நுழைந்தார்.

நீங்கள் இந்தப் பூமியில் பரிசுத்தமாய் வாழ்ந்து இயேசுவைப் பற்றிக் கொண்டால் மட்டுமே பரலோக இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க முடியும் என்பதை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன்.

இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது (மத்தேயு 6:24). ஒருவனைப் பகைத்து மற்றவனை சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது. உலகமும் அதன் ஆசை இச்சைகளும் ஒருநாள் ஒளிந்துப் போய்விடும். அதைப் பின்பற்றிப் போனவர்களும் அப்படியே போய்விடுவார்கள். கர்த்தருக்காக அனலாய் இருக்க வேண்டிய சிம்சோன், உலக இச்சைகளுக்கும் மாம்ச இச்சைகளுக்கும் இடம் கொடுத்து, அனலும் இல்லாமல், குளிரும் இல்லாமல் தேவனுடைய தரிசனத்தை விட்டு விலகிப் போனான். இன்றும் அநேக வாலிபர்கள் உலக ஆசைக்கும் இன்பத்திற்கும் இடம் கொடுத்துக் கர்த்தருக்கென்று பிரகாசிக்க முடியாமல் சிம்சோனைப் போலத் தரிசனத்தை இழந்துக் காணப்படுகின்றனர்.



இந்தக் கடைசி நாட்களில் தேவனுக்காகப் பெரியக் காரியங்களைச் சாதிக்க வேண்டிய நீங்கள், இப்படி இரண்டு பக்கத்திலும் இருந்தால் யாருக்கும் எந்தவித பிரயோஜனமும் இல்லை. நீங்கள் அனலுமில்லாமல், குளிருமில்லாமல் இருந்தால் வாந்தி பண்ணிப் போடுவேன் என்று கர்த்தர் எச்சரிக்கிறார்.

*எனக்கன்பான வாலிபர்களே!*
*இந்த உலகமும் அதில் இருக்கிற யாவும் ஒரு நாள் அழிந்து போகும்.*
*அழிந்து போகிற உலகத்தைச் சார்ந்து வாழாதபடி, அழியாத தேவனைச் சார்ந்து கர்த்தருக்கென்று அனலாய் இருங்கள்.*
*அனலுமில்லாமல் குளிருமில்லாமல் இருப்பது பரிதாபமான வாழ்க்கை.*
*நீங்கள் எந்த சூழ்நிலையிலும் பாவத்திற்கு இடங்கொடுக்காதீர்கள்.*

***யோசுவாவைப் போல கர்த்தருக்குள் வைராக்கியமாய் உறுதியாக இருங்கள்.***

*அப்பொழுது நீங்கள் கர்த்தருக்கென்று எரிந்துப் பிரகாசிப்பீர்கள்!*

# போதையால் மாறிய பாதை




ஆலோசனை: லிவி

*எனக்கு 28 வயதாகிறது. நான் 11ஆம் வகுப்பு படிக்கும்போது நண்பர்களுடன் சேர்ந்து போதைப் பாக்கு போட ஆரம்பித்தது, கல்லூரி படிக்கும்போது இன்னும் அதிகமாகி இன்றைக்கு போதைக்கு அடிமையாகி, என்னுடைய வாழ்க்கையே கேள்விக்குறியாக இருக்கிறது. என்னால் எந்த வேலைக்கும் செல்ல முடியவில்லை, என் குடும்பமே என்னை ஒதுக்கிவிட்டார்கள். ஏனென்றால் நானும் என் நண்பர்களும் இணைந்து போதையில் செய்வதறியாது அடி தடி, மற்றும் போதையினால் பல விபத்துக்கள் உண்டுபண்ணி, பல வழக்குகள் எங்கள் பெயரில் இருக்கிறது. இதனால் என் அக்காவிற்கு வரன்கள் வராமல் தடையாக இருக்கிறது. தம்பி இப்படி இருக்கும்போது எப்படி பெண் எடுப்பது என்று எல்லோரும் விலகிப் போகிறார்கள். எனக்கு ஒரு தங்கையும் இருக்கிறாள். என் குடும்பமே மிகவும் நொறுங்கி போய்க் காணப்படுகிறது. நான் இதிலிருந்து வெளியே வர வேண்டும் என்று நினைத்தாலும், என் நண்பர்கள் என்னைக் கட்டாயப்படுத்துகிறார்கள். நான் வெளியே வர விரும்புகிறேன்; ஆனால் என்னால் முடியவில்லை. என்ன செய்வது ? மைக்கேல் – ஆவடி.*

அன்புத் தம்பி மைக்கேல், உங்களுடைய நிலமை எனக்குப் புரிகிறது. ஒருபக்கம் இந்தப் போதை பழக்கத்திலிருந்து வெளியே வர முடியவில்லை என்கிற வேதனை, மற்றொரு பக்கம் என்னால் என் குடும்பமும், அக்கா மற்றும் தங்கையின் எதிர்காலமும் பாதிக்கப்படுகிறது என்ற மனவருத்தமும் உங்களை வாதிக்கிறது என்பதை என்னால் உணர முடிகிறது. விளையாட்டாக நண்பர்களுடன் சேர்ந்து பழகின பழக்கம், இன்று எந்த அளவுக்கு விபரீதமாக மாறியுள்ளது.

மைக்கேல், எந்த ஒரு பாவப்பழக்கத்திலிருந்தும் வெளியே வர முடியாது என்பது அல்ல. இதிலிருந்து என்னால் வெளியே வர முடியும் என்று நீங்கள் உறுதியாக நம்ப வேண்டும். முதலில் நீங்கள் ஒரு காரியத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். தன்னுடைய நண்பன் தவறான பாதையில் போகும்போது, அதிலிருந்து மீட்டு சரியான பாதைக்கு வழி நடத்துகிறவன் தான் நல்ல நண்பன். பாவத்தைச் செய்யக் கட்டாயப்படுத்துகிறவர்கள் நல்ல நண்பர்கள் கிடையாது. உங்களைத் தவறு செய்யக் கட்டாயப்படுத்தும் நண்பர்களால், உங்கள் வாழ்க்கையில் உள்ள பிரச்சனைகளைக் கொஞ்சம் கூட மாற்ற முடியாது. இந்தப் போதை பழக்கத்திலிருந்து வெளியே வர வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். ஆனால் விருப்பம் மாத்திரம் போதாது; விருப்பத்தோடு விடாமுயற்சியும் சுயகட்டுப்பாடும் மிக அவசியம்.

### உங்கள் நண்பர்களின் கட்டாயத்தினால் போதைப் பழக்கத்தைத் தொடர்ந்தால்...

- உங்களால் வேலைக்குப் போக முடியாத சூழ்நிலை உருவாகுவதோடு, உங்களுடைய எதிர்கால வாழ்க்கை இன்னும் அதிகமாக பாதிக்கப்படலாம்.
- இந்தப் போதை அடிமைத்தனம் உங்களைச் சிறை வரைக்கும் கொண்டுச் சென்று, அதன் மூலம் உங்களுக்கு மிகுந்த அவமானம் ஏற்படவும் வாய்ப்பு உண்டு.

▸ இதன் நிமித்தம் உங்கள் குடும்ப சூழ்நிலை இன்னும் அதிகமாகப் பாதிக்கப்பட வாய்ப்பு உண்டு.

▸ உங்களுடைய அக்காவிற்கு வரன்கள் வராமல் வாழ்க்கை பாதிக்கப்பட்டு இருக்கிறது போல், இதினிமித்தம் உங்கள் தங்கையின் வாழ்க்கையும் பாதிக்கப்படலாம்.

▸ அதனால் உங்கள் சகோதரிகளுக்கு உங்கள்மேல் வெறுப்பும், கசப்பும் உருவாகலாம்.

▸ இந்தப் போதை பழக்கத்தினால் உங்கள் உடல்நிலை அதிகமாகப் பாதிக்கப்பட்டு, தேவையில்லாத மனஉளைச்சல் உங்களுக்கு உண்டாகலாம். அதனால் விரக்தியில் தவறான முடிவு எடுக்கக் கூட வாய்ப்பு உண்டு.



### உங்கள் நண்பர்களின் வார்த்தைகளைக் கேட்காமல் போதைப் பழக்கத்திலிருந்து வெளியே வந்தால்...

▸ கேள்விக்குறியாக இருக்கிற உங்கள் வாழ்க்கை நிலை மாறி, நல்ல ஒரு எதிர்காலம் உருவாகும்.

▸ வேலைக்குப் போய் சம்பாதித்து உயர்ந்த இடத்தை அடையும்போது நீங்கள் அவமானப்பட்ட இடத்தில் தலைநிமிர்ந்து வாழலாம். மேலும் உங்கள்மேல் மதிப்பும் மரியாதையும் வரும்.

▸ அக்காவின் திருமண காரியம் கைக்கூடி வர வாய்ப்பு உண்டு. தங்கையின் எதிர்காலமும் துளிர்க்கும்.

▸ இதனால் உங்கள் நண்பர்களின் வெறுப்பை சம்பாதிக்கக் கூடும். ஆனால் உங்கள் குடும்பத்தாரின் அன்பு கிடைக்கும்.

▸ என் தீமையான செய்கையால் என் குடும்பம் பாதிக்கப்படுகிறதே' என்ற குற்ற மனசாட்சி மாறி, நிம்மதியும், சந்தோஷமும் உண்டாகும்.

▸ தலைகுனிந்த சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நடக்க முடியும்

## இந்த அடிமைத்தனத்திலிருந்து வெளியே வர சில டிப்ஸ்

▸ முதலில் உங்கள் தவறான நண்பர்களின் தொடர்பைத் துண்டியுங்கள். அவர்கள் உங்களைத் தொடர்பு கொள்ள இயலாதவாறு அவர்களை block செய்யுங்கள்.

▸ தனிமையில் போதைப் பொருட்களை உட்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வரும் என்பதால், தனிமையான நேரத்தைத் தவிர்க்க முயற்சியுங்கள்.

▸ தேவைப்பட்டால் நீங்கள் இருக்கிற ஊரை விட்டு விட்டு, வேறு ஊருக்குப் போய்ப் புதிய ஆரம்பத்தைத் தொடங்கலாம். ஒரு இடமாற்றம் பெரிய மாற்றத்தைத் தரும்.

▸ இருளை போவென்று சொன்னால் போகாது. மாறாக வெளிச்சத்தைக் கொண்டு வந்தால் இருள் தானாகப் போய்விடும்.



▸ அதேபோல் போதைப் பொருட்களை உட்கொள்ளக் கூடாது என்று அதையே சிந்தித்துக் கொண்டிராமல், விளையாடுவது, குடும்பத்தோடு நேரத்தைச் செலவழிப்பது போன்ற மற்றக் காரியங்களில் ஈடுபடலாம். அது உங்கள் எண்ணத்தை மாற்றும்.

**இவை எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் பாவத்தை மன்னித்து, பாவ பழக்கத்திலிருந்து விடுதலைக் கொடுத்து, உங்களை அவருடைய பிள்ளையாக ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிற இயேசு, உங்களுக்கு புதிய கிருபை கொடுத்துப் புதிய துவக்கத்தை தரப் போதுமானவராக இருக்கிறார்.**

**தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதி.28:13) என்பதாக வேதம் சொல்கிறது. உங்களுடைய பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிட்டு, விடுதலைப் பெற்று, ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பியுங்கள்!**

நிகழ்வு: ஜெயசீலன்



# நான் ஒரு ஜெப வீரன்

## உறுதியான ஜெபம் (தானியேல்)

*ஜெபத்தில் விடாப்பிடியாகவும், விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும் ஜெபிப்பதே உறுதியான ஜெபம். பலதரப்பட்ட சூழலில் ஜெபித்த பலரை நாம் பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கிறோம். ஒவ்வொருவருடைய ஜெபமும் தனித்தன்மையுடையதாகவே இருக்கிறது. கடந்த மாதத்தில் பேதுருவுக்காகச் சபை மக்கள் ஊக்கமாக ஜெபித்தபோது, அவன் சிறையிருப்பை தேவன் மாற்றினார் என்பதைப் பற்றிப் படித்தோம். இந்த மாதம்"தானியேல் எப்படி தன்னுடைய உறுதியான ஜெபத்தினால் காரியத்தை ஜெயமாக மாற்றினார்" என்பதைப் பற்றித் தான் பார்க்கப் போகிறோம்.*

### தானியேலின் உறுதியான ஜெபங்கள்

- தானியேல், இராஜாவின் கட்டளையை மீறி, தினமும் மூன்று வேளையும் முழங்கால்படியிட்டு ஜெபம் செய்தார் (தானி.6:10). இது அவரது வைராக்கியத்தையும், அர்ப்பணிப்பையும் காட்டுகிறது.
- அவர் ஜெபம் செய்யும்போது, எருசலேமை நோக்கி மேல் அறையில், பலகணிகளைத் திறந்து ஜெபம் செய்தார் (தானி 6:10). இது அவரது ஜெப வாழ்க்கையின் வெளிப்படையான தன்மையைக் காட்டுகிறது.



- அவர் சிங்கத்தின் குகையில் போடப்பட்ட போதும், ஜெபத்தை விடவில்லை. அவர் மிகுந்த விசுவாசத்தோடு ஜெபம் செய்தார் (தானி 6:23). இது அவர் தேவனை முழுமையாக நம்பியிருந்ததைக் காட்டுகிறது.

தானியேல் ஜெபத்தில் ஒரு உறுதியான மனிதர் என்பதை நாம் இதன் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. அவர் எந்த ஒரு சூழ்நிலையிலும் தனது ஜெபத்தை விடவேயில்லை.

### தானியேலின் உறுதியான காரியங்கள்

எருசலேமில் சுதந்திரமாகத் தேவனை ஆராதித்து, ஒரு யூதனாக வாழ்ந்து வந்த தானியேலுக்கும் நண்பர்களுக்கும், தேவனுக்கடுத்த காரியங்களில் பெரிய சோதனைகளைச் சந்திக்கவேண்டிய சூழ்நிலைகள் வந்தன.

- தானியேல் எந்தச் சூழ்நிலையிலும் உண்மையைப் பேசினார்; மற்றும் தேவனுக்கு உண்மையாக இருந்தார். தானியேல், தனது வாழ்க்கையில் நீதியை நிலைநாட்டினார். அவர் எந்த விதத்திலும் பொய் பேசவோ, அல்லது தவறு செய்யவோ விரும்பவில்லை.
- அந்நிய தெய்வ பெயர்களுடன் சம்பந்தப்படுத்தி தங்கள் பெயர்களை மாற்றியமைத்த போதும், அதையும் அவர்கள்

ஒரு பொருட்டாக எடுக்கவில்லை. ஏனெனில் அவர்கள் இருதயம் தேவனுக்கு நேராக இருந்தது.

▶ இராஜ போஜனம் யாருக்கும் கிடைக்காது; கர்த்தரே நமக்குக் கொடுத்திருக்கிறார் என்று சாப்பிட்டிருக்கலாம். ஆனால், தீட்டானதைத் தவிர்க்க வேண்டும் என்ற கர்த்தருடைய கட்டளைகள் தானியேலின் இருதயத்தில் இருந்தது. போஜன மயக்கம் அவர்களது ஆத்துமாவையே கெடுத்துப்போடும் என்பதால் உணவு விஷயத்தில் தானியேலும் நண்பர்களும் உறுதியாக இருந்தனர். **உணவு தன்னை தீட்டுப்படுத்தாதபடி தன் இருதயத்தில் பண்ணிக் கொண்ட தீர்மானத்தில் உறுதியாய் செயல்பட்டான் (தானி. 1:8-17).**

▶ தரியு இராஜா தன்னைத் தவிர வேறு எந்த தெய்வத்தை நோக்கி விண்ணப்பம் பண்ணினாலும், சிங்கங்களின் கெபியில் போடப்படுவார்கள் என்ற கட்டளைப் பிறப்பித்த போதும், தானியேல் ஜீவனுள்ள தேவனையே நோக்கி விண்ணப்பம் பண்ணுவதில் உறுதியாக இருந்தார். **இராஜாவும் பிரதானிகளும் தானியேலிடம் குற்றம் பிடிக்க முகாந்தரம் தேடியும் அவன், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேலறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்** (தானியேல்:6:10).

## தானியேலின் ஜெயம்

▶ தானியேலின் விசுவாசம் சிங்கத்தையே சிருஷ்டித்த தேவன் மேல் இருந்ததால், அவன் சிங்ககெபிக்கு பயப்படவில்லை. சிங்ககெபியில் போடப்பட்ட தானியேலிடம், **"நீ இடைவிடாமல் ஆராதிக்கிற தேவன் உன்னைத் தப்புவிக்க வல்லவர்"** என்று தரியு இராஜாவையே சொல்ல வைத்தது. அவருடைய உறுதியான விசுவாச வாழ்க்கை. தானியேல் தேவன் மேல் விசுவாசம் வைத்ததினால் அவனுக்கு ஒரு சேதமும் காணப்படவில்லை என வேதம் கூறுகிறது (தானி.6:23). சிங்கக்கெபியின் அனுபவம் தானியேலுக்கு ஜெயத்தைக் கொடுத்தது.

சிங்ககெபிக்கு அனுப்பாமலேயே தானியேலைத் தப்புவிக்க வல்லவர் நம் தேவன். ஆனால் தரியு இராஜாவும் பாபிலோனின் ஜனங்களும் தேவனுடைய வல்லமையையும் மகத்துவத்தையும் அறிந்திருக்க மாட்டார்கள். தரியு இராஜா அவர் "ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்;



தானியேலைச் சிங்கங்களின் கைக்குத் தப்புவித்த அவரே தப்புவிக்கிறவரும் இரட்சிக்கிறவரும், வானத்திலும் பூமியிலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவருமாய் இருக்கிறார்" என்று தேவனை மகிமைபடுத்தினான் (தானி. 6:26,27).

▶ தானியேலின் உறுதியான ஜெப வாழ்க்கை, உறுதியான விசுவாசம், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் அவரை பரிசுத்தமாக தரிசனமுள்ள வாழ்க்கைக்கு வழிநடத்தியது. அதுவே தானியேலின் காரியங்களை ஜெயமாய் மாற்றியது.

▶ சொப்பனத்தையும் அர்த்தத்தையும் சொல்லாவிட்டால் தேசத்திலுள்ள ஞானிகளைக் கொலை செய்ய நேபுகாத்நேச்சார் கட்டளையிட்டார். அதிலும் தேவன் ஜெயத்தைக் கொடுத்தார்.

அடிமையாக பாபிலோனுக்கு வந்த வாலிபன் தானியேலை தேவன் அந்த தேசத்திற்கே அதிகாரியாக உயர்த்தினார். தானியேல் எல்லா சூழ்நிலையிலும் தேவன் பேரில் உறுதியாக இருந்து தேவ நாமம் மகிமைப்பட்டதே இதற்கு காரணம்.

***அன்பான***
***வாலிப தம்பி, தங்கச்சி! தேவன் நம்மோடிருந்தால் எந்த சூழ்நிலையும் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. தானியேலைப் போல பயப்படாமல் உறுதியான ஜெபத்தினாலும், விசுவாசத்தினாலும் பரிசுத்த ஆவியின் துணையோடு எந்த சூழ்நிலைகளையும் மேற்கொள்ள கற்றுக்கொள்ளும்போது, நம்முடைய காரியங்களும் ஜெயமாய் மாறும் என்பதில் சந்தேகமில்லை.***

# மவுண்ட் சீனாய்

## வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச கூடுகை!

**தமிழ்நாடு, ஆந்திரா, மகாராஷ்டிரா, பாண்டிச்சேரி, கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் 32 இடங்களில் நடைபெற இருக்கிறது.**

அக்டோபர் 20 2025
திங்கள் கிழமை
(தீபாவளி தினத்தன்று)

**நேரம்:**
**காலை 9 மணிமுதல்**
**மாலை 4 மணிவரை**

## சென்னை மண்டலம்

### வேலூரில்...
உலக எழுப்புதல் ஜெப மையம்
அஜந்தா மஹால் காம்ப்ளக்ஸ்
முதல் மாடி, எண்.3, 6வது மேற்கு
குறுக்கு சாலை காந்தி நகர்
(விருதம்பேட் பெட்ரோல் பேங்க் எதிர்புறம்)

**சகோ. பொற்செல்வன் ஆசீர்**

தொடர்புக்கு: 94429 79556

### சென்னையில்...
உலக எழுப்புதல் ஜெப மையம்
பிரின்ஸ் குஷால் டவர்ஸ்
7வது மாடி, B-Wing
Adjacent to LIC Metro,
மவுண்ட் ரோடு,

**சகோ. GPS ராபின்சன்**

தொடர்புக்கு : 94884 75315

### திருவள்ளூரில்...
உலக எழுப்புதல் ஜெப மையம்
HSR டவர், 2வது மாடி
வில்லியம் கௌடி சாலை
சி.எஸ்.ஐ. கௌடி நினைவு
சர்ச் அருகில்

**சகோ. நல்லதம்பி சார்லஸ்**

தொடர்புக்கு: 70105 86464

### செங்கல்பட்டில்...
ட்ரினிட்டி ஹால்
திருக்கழுக்குன்றம் மெயின் ரோடு
திருப்போரூர் கூட் ரோடு அருகில
நெம்மேலி,

**பாஸ்டர் சரவணன்**

தொடர்புக்கு:
95975 88831 I 97108 09626

### இராணிப்பேட்டில்...
உலக எழுப்புதல்
ஜெப மையம் 96/12,
இரயில்வே ஸ்டேஷன் ரோடு
சீயோன் நகர், ஸ்கூடர் மெமோரியல்
மருத்துவமனை அருகில்

**சகோ. ஹெயின் வெஸ்லி**

தொடர்புக்கு: 95002 83179

### பேர்ணாம்பட்டில்...
எழுப்புதல்
ஜெப கூடாரம்,
இயேசு நேசிக்கிறார் ஜெபக்குழு
வி. கோட்டா ரோடு,

**சகோ. அருண் பீட்டர்**

தொடர்புக்கு: 99408 54125

### ஆம்பூரில்...
உலக எழுப்புதல் ஜெப மையம்
முதல் மாடி, ரெகோபோத் காம்ப்ளக்ஸ்
பெதஸ்தா மருத்துவமனை சந்து
ஆம்பூர், திருப்பத்தூர்

**சகோ. விஜயகுமார்**

தொடர்புக்கு:
9597927799 I 9552550315

### காஞ்சிபுரத்தில்...
A.K.G. திருமண மாளிகை
789, M.M. அவென்யூ
மேட்டுத்தெரு
பேருந்து நிறுத்தம் அருகில்

**சகோ. ஜெபசிங்**

தொடர்புக்கு:
9566212654 I 8903935315

## சேலம் மண்டலம்

### நாமக்கல்லில்...

நாமக்கல் நகராட்சி மண்டபம்,
சிட்டி யூனியன் வங்கி எதிரில்,
துறையூர் சாலை,
நாமக்கல் பேருந்து நிலையம்
பின்புறம்

**சகோ. சதீஷ்குமார்**

தொடர்புக்கு : 99620 85523
94893 01237 I 94886 18305

### சேலத்தில்...

YMCA,
123 பிரட்ஸ் ரோடு,
சேலம்

**சகோ.அவினாஷ்**

தொடர்புக்கு: 9962085523
9597754872 I 8300019710

## ஆந்திரா மண்டலம்

### சித்தூரில்...

St Luke's
Telugu church,
Parish hall
B.T compound.

**சகோ. சாம் மோசஸ்**

தொடர்புக்கு:
99620 85523 I 85001 28041

### புத்தூரில்...

Good Shepherd Ashram,
Church Compound,
Puttur, திருப்பதி மாவட்டம்

**சகோ. சாம் ஜெபராஜ்**

தொடபுக்கு :
7989295442 I 9962085523

## திருநெல்வேலி மண்டலம்

### ஜெபமலையில்...

கீழ மாதாபுரம்,
ஜெபமலை

**Dr. அன்புராஜன்**

தொடர்புக்கு:
830013 1000 I 97509 55548

### கோவில்பட்டியில்...

செயிண்ட் பால்ஸ்
மெட்ரிகுலேஷன் பள்ளி,
கோவில்பட்டி

**சுவி. சாம் பிரசாத்**

தொடர்புக்கு:
96778 58766 I 97873 22334

### நாலுமாவடியில்...

தேவனுடைய
கூடாரம்,
மோசஸ் அரங்கம்

**சகோதரி ஆஸ்லி எபனேசர்**
**சகோ. அகஸ்டின் இராஜசேகர்**

தொடர்புக்கு:
04639 - 353535 I 97509 55547

### சங்கரன்கோவிலில்...

உலக எழுப்புதல் ஜெப மையம்
ஷக்கினா ஹால்,காங்கிரஸ்
பொன்விழா மைதானம் பின்புறம்
முல்லை நகர்,
இராஜபாளையம் ரோடு,

**சகோ. ஆபிரகாம்**

தொடர்புக்கு:
9600736136 I 9750955548

### திருநெல்வேலியில்...

சாரா டக்கர்
பெண்கள்
மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை,

**பாஸ்டர்**
**இராபர்ட் ரொனால்ட்**

தொடர்புக்கு:
9750955548 I 9047480484

## திருச்சி மண்டலம்

### திருச்சியில்...

YMCA Hall,
Opp. To G.H., Puthur,

**சகோ. ஆஸ்பார்ன் சாம்**

தொடர்புக்கு : 94897 75075

## மதுரை மண்டலம் :

### தேனியில்...

தாவீதின் கூடாரம்
ஆராதனை மையம்
J D N காம்ப்ளக்ஸ்,
வைகை அணை ரோடு,
பெரியகுளம்,

**சகோ. ஜெபஸ்டின்**

தொடர்புக்கு:
99767 66422 I 97509 55548

### மதுரையில்...

ஏலிம் AG சபை
கூடல் நகர்

**சகோதரி செல்லராணி**
**அப்பாதுரை**

தொடர்புக்கு : 97509 55548

### சிவகங்கையில்...

KSM
திருமண மண்டபம்
(கலைஞர் மாளிகை)
திருப்பத்தூர் ரோடு,

**சகோ. ரூபன்**

தொடர்புக்கு: 80122 11022
94866 94442 I 97509 55548

### திண்டுக்கல்லில்...

CSI தூய பவுல் ஆலயம்
பாரீஸ் ஹால்,
திண்டுக்கல்.

**பாஸ்டர்**
**சாமுவேல் ஜெபராஜ்**

தொடபுக்கு : 63823 92446
93447 55306 I 90434 22612

## கோவை மண்டலம்

### திருப்பூரில்...

TELC அருள்நாதர் ஆலயம்,
சபாபதிபுரம்

**சகோ.
கார்த்தி கமாலியேல்**

தொடர்புக்கு:
99443 60222 | 97897 31768

### கோவையில்...

இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம்
அவிநாசி ரோடு,
பாப்பநாயக்கன் பாளையம்

**சகோ.
டேவிட் கணேசன்**

தொடர்புக்கு :
989439 9599 | 94884 75315

### ஈரோட்டில்...

CSI பிரப் சர்ச்,
பிரப் ரோடு

**சகோ. அந்தோணி தாஸ்**

தொடர்புக்கு :
9750722000 | 9976066143

### பொள்ளாச்சியில்...

இராஜாதி இராஜா
தேவ சபை ஊழியங்கள்
சூளேஸ்வரன்பட்டி

**சகோ.
இராஜேந்திரன்(தேனி)**

தொடர்புக்கு :
9486037586 | 9487856205

## கடலூர் மண்டலம்

### காங்கேயத்தில்...

ஸ்ரீ கணேஷ் மஹால்,
வாய்க்கால்மேடு ஸ்டாப்
திருப்பூர் ரோடு,

**சகோதரி அனிதா பானு
சகோதரி வசந்தி பால்**

தொடர்புக்கு :
9788298943 | 9488475315

### பாண்டிச்சேரியில்...

உலக எழுப்புதல் ஜெப மையம்
2, கொட்டுபளையம் ECR ரோடு,
(Tea time அருகில்)
லாஸ்பேட்டை
லதா ஸ்டீல் எதிரில்

**சகோ. காலேப்**

தொடர்புக்கு:
8344433800 | 9962085523

### திண்டிவனத்தில்...

ஆதி லட்சுமி திருமண மண்டபம்,
மரக்காணம் ரோடு
இந்திரா நகர், திண்டிவனம்.

**சகோ. ஆஸ்பர்ன் சந்தோஷ் ஆசீர்**

தொடர்புக்கு:
9962085523 | 9159597488

### கர்நாடகா மாநிலம் - பெங்களூரில்...

World revival prayer centre,
57/2, thomasappa layout
(opp ) Lumbini,Garden Bus Stand
Outer Ring Road,
Veerannapalaya (Nagavara),

**சகோ. குரூஸ் மாசிலாமணி**

தொடர்புக்கு:
99620 85523 | 78990 88538

### கேரளா மாநிலம் - திருவனந்தபுரத்தில்...

Love Army Crusade Centre,
Parasuvakkal,
Trivandrum

**சகோ. நவீன் சாம்**

தொடர்புக்கு :
92497 18266 | 99620 85523

**வாலிபர்களின் ஜெபம் மிகவும் வல்லமையுள்ளது. எனவே, பெற்றோர் உங்கள் பிள்ளைகளை அழைத்து வாருங்கள். தேசத்திற்காக நாம் ஒன்றிணைந்து ஜெபிப்போம்! ஜெயம் எடுப்போம்!**

### மகாராஷ்டிரா மாநிலம் - மும்பையில்

**அக்டோபர் 21
செவ்வாய்கிழமை**

Morning Star School, Ashok Mill Compound
Sion Bandra link Road,Opp.
Saheel Hotel, Dharavi

**சகோ. தினகரன்(பேர்ணாம்பட்)**

தொடர்புக்கு: 9004882470 | 8082410410



தகவல்: டியூக் ரிச்சர்ட்



# இது இல்ல Trendu

ஹலோ ப்ரண்ட்ஸ்.
இந்த trend article மூலம் மீண்டும்
உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

நாம் சில காரியங்களில் மாதிரியாக இருக்க வேண்டும் என்று வேத புத்தகம் நமக்கு அறிவுறுத்துகிறது. நாம் செய்கிற காரியங்கள் நமக்குத் தகுதியானதா, தகுதி இல்லையா என்பதை ஆராய்ந்துப் பார்க்கிற ஒரு பகுதியாக இப்பகுதி அமைந்து வருகிறது என்று விசுவாசிக்கிறேன்.

இன்றைக்கு வாலிபர்கள் தான் அதிகமாக நற்கிரியைகள் செய்வதைப் பார்க்க முடிகிறது. நற்பணி மன்றங்கள்மூலம் நற்காரியங்கள் செய்வது Helping tendency. அதைத்தான் பவுல் தீத்து என்கிற வாலிபனுக்கு, **'நீயோ எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பி'** (தீத்து2:7) என்று அறிவுறுத்தியுள்ளார். பிறருக்கு நன்மையான காரியங்களைச் செய்வதற்கான கிருபை தீத்துவுக்கு இருந்தது.

சில வாலிபர்கள் முழு இருதயத்தோடு நன்மை செய்கிறார்கள். சிலருக்கு நன்மை செய்வது என்பது கொஞ்சம் கடினமான காரியம். இன்னும் சிலர் தன்னை விளம்பரப்படுத்துவதற்காகத் தங்களை அதில் ஈடுபடுத்திக் கொள்வார்கள்.

**'நான் கற்பனைகள் எல்லாவற்றையும் கடைபிடித்து கொண்டு வருகிறேன். எனக்குப் பரலோகம் கிடைக்குமா?'** என்று இயேசு கிறிஸ்து அந்த வாலிபனை சந்தித்தபோது கேட்கிறதை நாம் வேதத்தில் பார்க்கிறோம். பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கணும்னா உனக்குரியதை விற்று ஏழைகளுக்குக் கொடு என்று இயேசு சொன்னார்.

எனக்குப் பிரியமான வாலிபர்களே, இன்றைக்கு நம்மைச் சுற்றி நடக்கும் சில காரியங்களைப் பார்த்தா வித்தியாசமா இருக்கு. தாம் பிரபலமடைவதற்காக ஏழைகளுக்குக் கொடுப்பது போலக் கொடுத்துப் போட்டோ எடுத்து status போடுவது. நற்பணி மன்றங்கள் முன்னாடி தாங்கள் பெரிய மேன்மையான காரியத்தைச் செய்வது போல விளம்பரப்படுத்துவது என்று இப்படி பல காரியங்கள் trendஆக இருக்கிறது. வாலிபர்கள் தங்களை நல்லவர்களைப் போலக் காண்பிப்பதற்கு, பிறருக்கு நன்மை செய்கிறதை விளம்பரப்படுத்துகிறார்கள்.

எனக்குப் பிரியமான கர்த்தருடைய பிள்ளையே, பைபிள் என்ன சொல்கிறது?? **"நற்கிரியைகளுக்கு உன்னை மாதிரியாகக் காண்பி"**. மற்றவர்கள் செய்கிற நன்மைக்கும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் செய்கிற நன்மைக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது.

ஐரோப்பியக் கண்டத்தைச் சார்ந்த அன்னை தெரசா அவர்கள், மிஷனெரியாக இந்தியாவிற்கு வந்து, இந்தியராகவே வாழ்ந்தார்கள். அவர்கள் கிறிஸ்துவின் அன்பினால் ஈர்க்கப்பட்டு, குஷ்டரோகிகளை அருவருப்பாகப் பார்க்காமல், எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் நன்மை செய்தார்கள்.

எனக்குப் பிரியமான பிரண்ட்ஸ் விளம்பரத்திற்காக அல்ல, கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துவதற்காக நற்கிரியை செய்வோம்.

**"உங்களுக்கு உண்டானவைகளில் பிச்சை கொடுங்கள். அப்பொழுது சகலமும் உங்களுக்குச் சுத்தமாய் இருக்கும்"** (லூக்கா 11:41) என்று வேதம் சொல்லுகிறது. பாருங்கள், நாம் சுத்திகரிக்கப்படுவதற்கும் மற்றவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டியுள்ளது. முழு இருதயத்தோடு பிறருக்கு நன்மை செய்ய முன்வருவோம். கர்த்தர் அதைத்தான் எதிர்பார்க்கிறார். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான் என்று வேதம் நமக்குச் சொல்லுகிறது. இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும்போது அவர் நற்கிரியைகளை, நன்மைகளைச் செய்தார் (அப் 10:38) என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும்போது நன்மை செய்ய உந்தப்படுவோம். வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பதில்தான் அதிக மகிழ்ச்சி. இந்த மாதத்தில் நாம trendஐ மாற்றப் போகிறோம். நற்கிரியை விளம்பரத்திற்காக அல்ல, நற்கிரியை பிறருக்கு நன்மை செய்வதற்காக...! மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம் பிரண்ட்ஸ்.

சாதனை: சுமா கிறேஷன்



# 400 தடைகள்... ஒரு இலக்கு!

அன்பான இளம் சாதனையாளர்களுக்கு, என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்! கல்வி, விளையாட்டு அல்லது நாம் செய்கின்ற தொழில்கள் எதுவாகயிருந்தாலும் அதில் வெற்றி அடைய வேண்டும், வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதே நம் எல்லாரிடமும் இருக்கும் பொதுவான ஆசை.




ஆனால் தோல்வி அல்லது ஏதோ ஒரு இடத்தில் நிராகரிப்பு ஏற்படும்போது, வெற்றி காண வேண்டும் என்ற ஆசை இருந்த இடம் தெரியாமல் போய்விடுகிறது. இதை வாசிக்கும் நீங்களும் இந்த நிலையில் இருந்தால், இது உங்களுக்கான பக்கம்.

உத்திரப்பிரதேசத்தில் காசியாபாத் நகரில் பிறந்த ஒரு சிறுவன், ஒருநாள் உலகின் மிக அதிக சம்பளம் பெறும் நபராக மாறுவார் என்று யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். அந்தச் சிறுவன் தான் நிகேஷ் அரோரா. இவருடைய தந்தை விமானப்படையின் அதிகாரியானதால், மிகுந்த கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்டார். கல்வியில் மிகச்சிறந்த மாணவராகத் திகழ்ந்தார். IIT -BHUவில் மின்னணு பொறியியல் பட்டம் பெற்றார். தன்னுடைய துறையில் வெற்றிக்காண வேண்டும் என்ற கனவை நிறைவேற்ற அமெரிக்கா சென்று MBA மற்றும் நிதித்துறையில் மேற்படிப்பு முடித்தார். படித்து முடித்தவுடன் வேலை, உயர்வு, புகழ் என்று போக வேண்டும் என்ற எண்ணம் எல்லாரிடமும் இருக்கும். அதேபோல் தான் அரோராவுக்குள்ளும் இருந்தது. ஆனால் அவர் எதிர்பார்த்த வெற்றி எளிதில் கிடைக்கவில்லை. தன்னுடைய கனவு வேலையை அடைய முயற்சி செய்தபோது, 400 முறை அவருடைய வேலை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. இத்தனை முறை நிராகரிக்கப்பட்டதால் அரோரா, இதுதான் முடிவு என்று முயற்சியைக் கைவிட்டு சோர்ந்து போகாமல், இதைத் தொடக்கமாக எடுத்துக் கொண்டார். இறுதியில் Fidelity Investmentsல் vice president பதவி கிடைத்தது. பிறகு அவரது திறமையை Google நிறுவனம் கண்டு EMEA பிராந்திய தலைவராகவும், பின்னர் Chief Business Officer ஆகவும் இவரை உயர்த்தியது.



பின்னர் Soft Bank Groupல் President மற்றும் CEOவாக இணைந்தார். 2018ல் Palo Alto Networks நிறுவனத்தில் CEO மற்றும் தலைவராகப் பொறுப்பேற்றார். உலக அளவில் தொழில் துறையில் சிறந்த நபராகத் திகழ்ந்தார். 2023ல் இவர் பெற்ற சம்பளம் $151.4 மில்லியன். இது அவரை அமெரிக்காவின் மிக அதிக சம்பளம் பெறும் CEOக்களில் ஒருவராக்கியது.

**இதை வாசிக்கும் நண்பர்களே! 400 முறை நிராகரிப்பு வந்தாலும், ஒவ்வொரு முறையும் எழுந்து, மறுபடியும் தன்னுடைய கனவுக்காகப் போராடினதால் மட்டுமே, அரோரா வெற்றியைக் கண்டார். அதேபோல நிராகரிப்பு அல்லது தோல்வி என்பது முடிவு அல்ல; அது வெற்றியைக் காண தகுதிப்படுத்தும் ஒரு பாடம் என்று எடுத்துக் கொண்டால், நாமும் வெற்றியாளர்கள் தான்!**

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

1) இவர்களில் யாருடைய பெயர் பைபிளில் மாற்றப்படவில்லை?
a) சாராள் b) ஆபிரகாம் c) யாக்கோபு d) தாவீது e) பேதுரு

2. சாமுவேலின் கதைகளில், எது உண்மையல்ல?
a) அவரது தாயார் அன்னாள் என்று அழைக்கப்பட்டார்
b) அவர் இஸ்ரவேலின் 3 ராஜாக்களை அபிஷேகம் செய்தார்: யோசேப்பு, சவுல் மற்றும் தாவீது
c) அவர் ஏலிக்குப் பிறகு தீர்க்கதரிசியாகப் பதவியேற்றார்
d) அவர் சிறுவனாக இருந்தபோது கர்த்தரின் சத்தத்தைக் கேட்டார்.

3. எந்தத் தீவிலிருந்து வெளிப்படுத்தல் புத்தகத்தை யோவான் எழுதினார்?
a) கிரேத்தா தீவு b) மெலித்தா தீவு c) பத்மு தீவு d) பெர்கமான் தீவு

4. மோசேயின் இரண்டு உடன்பிறப்புகள் யார்?
a) ஏசா மற்றும் யாக்கோபு b) மிரியாம் மற்றும் ஆரோன் c) யோசுவா மற்றும் காலேப்
d) பிரிஸ்கில்லா மற்றும் ஆக்கில்லா

5. தெலீலாள் பெலிஸ்திய இராணுவத்திடம் ஒப்படைக்க மயக்கிய எபிரேய நீதிபதி யார்?
a) சாமுவேல் b) சாலொமோன் c) சிம்சோன் d) சவுல்

6. தன்னை யார் அனுப்பினார்கள் என்று மோசேயிடம் கேட்டபோது, அவர் இஸ்ரவேலர்களுக்கு என்ன பெயரைக் கொடுக்க வேண்டியிருந்தது?
a) "எலோஹிம்" b) "எல் ஷடாய்" c) "நான் யார்" d) "நான் கர்த்தர்"

7. பிலேயாமிடம் பேசிய விலங்கு எது?
a) கழுதை b) ஒட்டகம் c) ஆட்டுக்குட்டி d) புறா

கடந்த மாத வெற்றியாளர் சகோதரி ஸ்நேகா, பாண்டிச்சேரி அவர்களை வாழ்த்துகிறோம்!

1) தகப்பனே தந்தையே தலைநிமிரச் செய்பவரே (சங். 3:3)
2) வாதை உந்தன் கூடாரத்தை அணுகாது (சங். 91:10)
3) காட்டுப்புறாவின் சத்தம் (உன். 2:12)
4) கர்த்தாவே தேவர்களில் உமக்கொப்பானவர் யார்? (யாத். 15:11)
5) என் ஆத்துமா உம்மை நோக்கி அமர்ந்திருக்கும் (சங்.62 1,2)
6) நானும் என் வீட்டாருமோவென்றால் (யோசுவா 24:15)
7) மான்கள் நீரோடை வாஞ்சித்து கதறுவதுபோல் (சங். 42:1)
8) ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே (எண். 21:17)
9) உன்னதமானவரின் உயர் மறைவிலிருக்கிறவன் (சங். 91:1)
10) ஒரு தாய் தேற்றுவது போல் (ஏசாயா 66:13)




கிறிஸ்தவ செய்திகள்: ஜெனிபர்

# பரபரப்பு செய்திகள்

## Hi Friends

*எல்லாரும் எப்படி இருக்கீங்க? பரபரப்பு செய்திகள் என்னும் இத்தொடரின் மூலம் மீண்டும் இந்த மாதம் உங்களைச் சந்திப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி!*

யோசுவா எமோரியர்களை எதிர்த்துப் போரிடும்போது தேவனை நோக்கி ஜெபம் பண்ணி, இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாகக் கிபியோன் மேலும் ஆயலோன் மேலும் சூரியனையும் சந்திரனையும் தரித்து நிற்கச் செய்ததையும், எலியா வானத்திலிருந்து அக்கினி இறக்கி, அங்கிருந்த ஜனங்களுக்குக் கர்த்தரே தேவன் என்று நிரூபித்ததையும், இயேசுவானவர் பெரும் காற்றடித்து கடல் கொந்தளித்தபோது காற்றுக்கும் கடலுக்கும் கட்டளை கொடுத்து அதை அமரச் செய்ததையும் நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம். இந்த அற்புதங்கள் விஞ்ஞானத்துக்கும் அப்பாற்பட்டு இயற்கையின் விதிகளை மாற்றிப் போட்டு, இயற்கையை கட்டுப்படுத்தி பல ஜனங்களைத் தேவனிடம் திருப்பினதாய் உள்ளது.





ஏன் இயேசுவின் சீஷனாகிய **Doubting Thomas** என்று பலரால் அழைக்கப்படுகிற தோமாவும், தன்னுடைய விசுவாசத்தின் மிகுதியால் இப்படிப்பட்ட அற்புதத்தைச் செய்திருக்கிறார். அவர் ஒருநாள் கேரளா மாநிலம் பாலையூரில் ஒரு கோயில் அருகில் உள்ள குளக்கரை ஓரத்தில் நடந்து சென்று கொண்டிருக்கும்பொழுது, ஒரு சில மனிதர்கள் இறந்த தங்கள் முன்னோர்களுக்காகப் பூஜை செய்து கொண்டிருந்தனர். அப்போது அந்தக் குளத்தின் தண்ணீரை, தங்கள் உள்ளங்கைகளால் அள்ளி மேலே வீசி அந்தத் தண்ணீர் தங்கள் முன்னோரைச் சென்றடையும்படி வேண்டிக் கொண்டிருந்தனர். இதைப் பார்த்த தோமா, ஏன் நீங்கள் மேலே வீசிய தண்ணீர் திரும்பவும் கீழே வந்து விடுகிறது, அப்படியானால் உங்களுடைய கடவுள் உங்களுடைய வேண்டுகோளை ஏற்கவில்லை என்று தானே அர்த்தம். நான் வணங்கும் என் தெய்வம் என் வேண்டுதலை ஏற்றுக் கொள்வதோடு மட்டுமல்லாமல், அதற்கு அடையாளமாகத் தண்ணீரை மேலே நிற்கச் செய்வார் என்று சொல்லி அவர்களைப் பார்த்துச் சவால்விட்டார்.



சவால் விட்டதோடு விடாமல், தோமா வானத்தை அண்ணாந்துப் பார்த்து, இயேசுவை நோக்கி ஜெபம் செய்து, அந்தக் குளத்தில் இறங்கி, தன் இரு கைகளாலும் தண்ணீரை அள்ளி, விசுவாசத்தோடு மேலே தூவினார். மேலே சென்ற தண்ணீர் கீழே விழாமல் எல்லோரும் ஆச்சரியப்படத்தக்க விதமாக அந்தரத்தில் பூக்களைப் போல நின்றது. அதுமாத்திரமல்ல, தோமா தன் கைகளால் நீரை அள்ளிய அந்த இடம், தண்ணீர் நிரம்பி சமப்படாமல் சிறிய ஒரு குழியைப் போலக் காட்சியளித்தது. அந்தச் சம்பவம் காட்டுத்தீ போல மிக வேகமாக அந்தப் பட்டணம் முழுவதும் பரவியது. உடனே அந்தப் பட்டணத்தில் உள்ள ஜனங்கள் அந்த அற்புதக் காட்சியைக் காண அந்தக் குளத்திற்கு வந்து, அதைக் கண்டு, தோமாவின் தெய்வமே தெய்வமென்று முழக்கமிட்டனர். இந்த அற்புதத்தின் மூலமாக அந்தப் பட்டணத்தில் உள்ள சுமார் 1050 பேர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, ஞானஸ்நானம் பெற்றனர். இந்த அற்புதம் நடைபெற்ற இடம் இன்னும் கேரளாவில் உள்ள பாலையூரில் இருக்கிறது.

இப்படிப்பட்ட, இயற்கைக்கும் கட்டளை கொடுக்கிற அற்புதங்கள் இந்த காலத்திலும் நடக்குமா என்று சொல்லி ஆச்சரியப்பட்டு யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது, **கன்னியாகுமரியில் இருந்து ஒரு பரபரப்பான செய்தி வந்தது.**

ஒரு சில வருடங்களுக்கு முன்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ஜெபக் கூடுகை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த ஜெபக் கூடுகையில் பிரபலமான தேவ ஊழியர் ஒருவர் கலந்துகொண்டு தேவசெய்தி கொடுக்க இருந்தார். இந்த ஜெப கூடுகைக்கான ஆயத்த வேலைகள் ஒருசில மாதங்களுக்கு முன்பாகவே தொடங்கிவிட்டது. ஆனால் அந்த prayer meetingற்கு 2 நாட்கள் முன்பதாக தமிழ்நாடு முழுவதும் ஒருசில மாவட்டங்களில் கன மழை பெய்தது; கன்னியாகுமரி மாவட்டத்திலும் இரவும் பகலும் விடாது கனமழை பெய்யவே, அதன் காரணமாக அந்த மாவட்டம் முழுவதும் Red alert போடப்பட்டது. நம் அனைவருக்கும் தெரிந்தது போலவே ரெட் அலர்ட் என்பது ஆபத்தான ஒன்று, வெள்ளம் வருவதற்கான வாய்ப்புகள் இருந்தன. இப்படிப்பட்ட ஒரு சூழல் நடுவில் தான் அந்த ஜெபக்கூட்டம் நடந்தது. இந்தக் கூடுகையில் இலட்சக்கணக்கான ஜனங்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு முழுவதும் உள்ள தேவ ஜனங்கள் இந்த கூடுகைக்காக ஜெபிக்க ஆரம்பித்தனர். அந்த தேவ மனிதர், தேவனிடம் இந்த கூடுகைக்காக ஜெபிக்கும் போது, ''நீ கடந்து அந்த மாவட்டத்திற்கு போ, நான் அங்கு வந்து பலத்த அற்புதங்களை செய்வேன்'' என்று சொல்லி அனுப்பவே, ரெட் அலர்ட் விடப்பட்டிருந்த ஆபத்தான சூழ்நிலையிலும் அந்தக் கூடுகை மூன்று நாட்கள் எந்த தடையும் இல்லாமல் நடந்தது. ஒட்டுமொத்த உலகமே என்ன நடக்கும் என்று காத்திருந்த சூழ்நிலையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் போடப்பட்டிருந்த ரெட் அலர்ட் மாறியது. இனி அங்கு எந்த ஆபத்தும் இல்லை என்று அறிக்கை வந்தது. அதுமட்டுமட்டுமல்லால், அந்த ஜெப கூடுகையில் தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட பல அற்புதங்களை செய்து பலருடைய வாழ்க்கையை திருப்பிப் போட்டார். ஜெபிக்கிற மனிதருடைய விசுவாசம் நிறைந்த வார்த்தைகள் இயற்கையை கூட கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விடும் என்பதற்கு எவ்வளவு பெரிய சாட்சியாய் இருக்கிறது இந்த சம்பவம்.

**அப்பப்பா... இந்த அற்புதங்கள் நம்முடைய கற்பனைக்கு எட்டாத அளவிற்கு எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது. இயற்கைக்கு கட்டளை கொடுக்கிற இப்படிப்பட்ட அற்புதங்களை வெறும் கேள்விப்படுகிறவர்களாக மாத்திரம் அல்ல, அதை செயல்படுத்துகிறவர்களாகவும் இருக்கவே தேவன் நம்மை தெரிந்துகொண்டார். அதற்காகவே மகா பரிசுத்தமான விசுவாசத்தை நமக்கு கொடுத்திருக்கிறார். அந்த விசுவாசத்தில் நாம் வளர்கிறோமா? நம்முடைய விசுவாசத்தின் அளவுகோல் எப்படி இருக்கிறது? சாதாரண விசுவாசம் அல்ல, உறுதியான திடமான விசுவாசமும், விலைக்கிரயம் செலுத்தப்பட்ட ஜெப வாழ்க்கையும், 'தேவனால் நான் பயன்படுத்தப்பட வேண்டும்' என்ற தீராத தாகமும் மட்டுமே இப்படிப்பட்ட அற்புதங்களுக்கு வழிவகுக்கும். ஜெபிப்போம், செயல்படுவோம். கர்த்தருக்காக அசாத்தியமான காரியங்களை செய்வோம்.**

*(செய்திகள் தொடரும்)*

தகவல்: மோசஸ்

# ஆசரிப்பு கூடாரம்



*கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே, மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் வரவழைத்து, தண்ணீரினால் ஸ்நானம் பண்ணுவித்து, அவனுக்கு உள்ளங்கிப் போட்டு, இடைக்கச்சையைக் கட்டி, மேலங்கியை உடுத்தி, ஏபோத்தைத் தரித்து, அதின் மேல் ஏபோத்தின் விசித்திரமான கச்சையைக் கட்டி, அவனுக்கு மார்பதக்கத்தை அணிந்து, மார்பதக்கத்திலே ஊரீம் - தும்மீம் என்பவைகளையும் வைத்து, அவன் தலையிலே பாகையைத் தரித்து, பாகையின் மேல் அவன் நெற்றியிலே பரிசுத்த கிரீடம் என்னும் பொற்பட்டதைக் கட்டினான்.*
*அவைகள் எவையெனக் காண்போம்.*

ஆசாரிய வஸ்திரம் தேவனால் வடிவமைக்கப்பட்டது. பொன்னினாலும், இளநீல நூலாலும் இரத்தாம்பர நூலாலும் சிவப்பு நூலாலும் மெல்லிய பஞ்சு நூலாலும் விசித்திர வேலையாகச் செய்யப்பட்டது.

**ஏபோத்:** பிரதான ஆசாரியன் மட்டுமே அணிய வேண்டும். அது தங்கமுலாம் பூசப்பட்ட அழகான பலவர்ண மேலங்கிபோல் இருக்கும்.



ஏபோத் என்றால் துதி – கர்த்தரைப் புகழ்வது என்று அர்த்தம். நாமும் கர்த்தரை அவர் செய்கிற கிரியைகளைப் பார்த்து, அவரைத் துதிக்க வேண்டும். இரண்டு கோமேதகக் கற்களை எடுத்து, இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை, அவர்கள் பிறந்த வரிசையின்படியே ஆறு நாமங்கள் ஒரு கல்லிலும், மற்ற ஆறு நாமங்கள் மறு கல்லிலும் வெட்டி, அந்த இரண்டு கற்களையும் ஏபோத்துத் தோள்களின் மேல் வைத்தான். இது ஜனங்களுக்காக நாம் ஜெபிப்பதை, உதவுவதை, தாங்குவதை, சுமப்பதை குறிக்கிறது.

**மார்பதக்கம்:** சதுரமும் இரட்டையுமாய் செய்து ஒரு ஜாண் நீளமும் அகலமுமாக்கி, ஒரு வரிசையில் மூன்று கற்கள் என நான்கு வரிசையில் 12 விலையுயர்ந்த கற்களில், இஸ்ரவேல் புத்திரர்களின் பெயர்களை எழுத வேண்டும். இது ஆசாரியனின் இருதயத்திற்கு மேல் வைக்கப்பட்டிருக்கும். இது நாம் ஜனங்களை நேசிக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது (யாத்.39:8-21)

நியாயவிதி மார்ப்பதக்கத்திலே **ஊரீம் - தும்மீம்** (யாத்.28:30) என்பவைகள் பொருத்தப்பட்டிருக்கும். இவை வெள்ளை மற்றும் கறுப்பு நிற கற்கள் ஆகும்.



இது தேவசித்தத்தை வெளிப்படுத்தும் கர்த்தருடைய கருவி. மனிதனின் கேள்விகளுக்கு ஆம் அல்லது இல்லை என்று பதிலளிப்பது இதன் பணியாகும்.

**ஊரீம் என்றால் வெளிச்சம்.** வேத வசனங்கள் நமக்கு வெளிச்சம் (சங்கீதம் 119:105).

**தும்மீம் என்றால் பூரணம்**, பரிசுத்த ஆவியானவர் பரிபூரணமானவர் (யோவான் 16:13).

**அங்கி:** இளநீள நிறத்தில் காணப்படும். ஒரு பொன்மணியும், ஒரு மாதளம்பழமும் என அங்கியின் கீழ் ஓரத்தில் சுற்றிலும் தொங்கும். மாதளம்பழம் என்பது நாம் கனி கொடுக்க வேண்டும் என்பதையும், பொன்மணி நாம் வல்லமை, வரங்கள் உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் காட்டுகிறது.

**விசித்திரமான உள் சட்டை:** இது ஆசாரியனின் சரீரத்தில் படும். அழகு இல்லாமல் இருக்கும். வெள்ளை நிறம் உடையது. தாழ்மை, சாந்தம் மற்றும் சுத்தமான வாழ்க்கை வாழ வேண்டும்.

**(தலைப்) பாகை:** கிரீடம் போலத் தலைமேல் வைக்க வேண்டும். வலது காதிலிருந்து தலை முழுவதும் சுற்றி கட்டப்பட்டிருக்கும். காதும் தலையும் மூடப்பட்டிருக்கும். தன் சுயபுத்தியால் அறிவினால் ஊழியத்தை செய்யாமல், ஆண்டவரின் சத்தத்தையன்றி மனித வார்த்தைகளைக் கேட்கக் கூடாது என்பதைக் குறிக்கிறது.

பரிசுத்தக் கிரீடத்தின் பட்டத்தைப் பசும் பொன்னினாலே செய்து, கர்த்தருக்கு பரிசுத்தம் என்று முத்திரை வெட்டாக வெட்டி, பாகையின் மேல் கட்டினார்கள். எல்லாரும் பார்க்கும்படி நம்முடைய பரிசுத்தம் காணப்பட வேண்டும். நான் ஆண்டவருக்காகப் பிரித்தெடுக்கப்பட்டவன், நான் ஆண்டவருக்கு மட்டும் உரியவன் என்பதைக் காட்டுகிறது.

**இடைக்கச்சை:** பரிசுத்த வஸ்திரங்களை உடம்போடு சேர்ப்பது இடைக்கச்சை. ஆரோனை ஆசாரியனாக, சரியாகத் தேவனுக்கு முன்பாக நிறுத்துகிறது. நாமும் சத்தியம் என்னும் கச்சையைக் கட்டினவர்களாய் விசுவாசத்தில் உறுதியாக இருக்க வேண்டும்.

- ஆசாரியன் ஜனங்கள் முன்பாக நிற்கும்போது, பிரகாசிக்கக்கூடிய விலையுயர்ந்த பரிசுத்த வஸ்திரங்களை தரித்திருக்க வேண்டும். நாம் ஜனங்களுக்கு முன்பாக வல்லமை, வரங்கள் மற்றும் தேவஞானத்தில் நிறைந்தவர்களாய் காணப்பட வேண்டும்.
- ஆனால் ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவ சமூகத்தில் தேவனுக்கு முன்பாக (லேவி. 16:4), பரிசுத்தமான சணல் நூலில் வஸ்திரங்களை தரித்துக் கொண்டிருக்க வேண்டும். நாமும் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடந்து கொள்ள வேண்டும் (மீகா 6:8) என்பதாகும்.



**ஆசாரியன் பரிசுத்த வஸ்திரங்களை தரித்துக் கொண்டது போல, இயேசுவின் இரத்தத்தினாலே ஆசாரியராக்கப்பட்ட நாம் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக் கொள்ள வேண்டும் (எபே.4:24). கடைசிகால எழுப்புதலுக்காக தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள். (எபே. 6:10-17).**

*அடுத்த மாதம் ஆசரிப்பு கூடாரத்தின் ஆச்சரியமூட்டும் சுவாரஸ்யமானக் காரியங்களைப் பார்ப்போம்...*





# ஜெபக் கையேடு

அக்டோபர் 2025

ஜெபம்: எஸ்தர்

1 உலகளாவிய பொருளாதார நெருக்கடியால், கடந்த ஆண்டு 78.3 கோடி பேர் பட்டினியால் வாடியதாக ஐ.நா ஆய்வு அறிக்கை கூறுகிறது. இந்த நிலை மாற நாம் ஜெபிப்போம்.

2 உலகளவில் முழுமையான உணவின்றி பட்டினியால் வாடுகின்ற மக்களுக்காக ஜெபிப்போம்.

3 ஒருவேளை உணவு, இருக்க இடம் இல்லாமல் பட்டினி கிடக்கும் 78.3 கோடி மக்களுக்கு உணவுகள் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

4 ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவுகள் இல்லாமல், வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ள 14.8 கோடி குழந்தைகளுக்கு, ஊட்டசத்துள்ள உணவுகள் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

5 மேற்கு ஆசியா, கரீபியன் மற்றும் ஆப்பிரிக்காவின் பல நாடுகளின் பொருளாதாரம் பின்தங்கி இருப்பதினால், உயிர் வாழ்வதற்கான குறைந்தபட்ச உணவைக் கூடப் பெற முடியாத சூழ்நிலையில் உள்ள மக்களுக்காக ஜெபிப்போம்.

6 ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையே நடந்து வரும் போரினால் உணவு, தானிய விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உணவு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்தப் போர் நிறுத்தப்பட ஜெபிப்போம்.

7 பருவநிலை மாற்றத்தின் காரணமாகவும், இயற்கைப் பேரழிவு, வறட்சி காரணமாகவும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில், கர்த்தர் நல்ல செழிப்பைக் கட்டளையிட ஜெபிப்போம்.

8 ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தி செய்யப்படும் உணவில் மூன்றில் ஒரு பங்கு – அதாவது 130 கோடி டன் உணவு வீணடிக்கப்படுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

9 வளரும் நாடுகளில் உணவு பொருட்களைச் சேமித்து வைப்பதற்கு சரியான குடோன் இல்லாத காரணத்தினால், கோடிக்கணக்கான டன் உணவுகள் வீணாக்கப்படுகின்றன. இந்நிலை மாறவும் உணவுக் கிடங்குகள் அமைத்து உணவுப்பொருட்கள் சரியாகச் சேமித்து வைக்கப்படவும் ஜெபிப்போம்.

10 அலட்சியத்தினால் உணவை வீணடிப்பவர்கள் மனந்திரும்பி, அதை மற்றவர்களுக்குப் பிரயோஜனமாய் கொடுத்து உதவுகிற மனம் அவர்களுக்கு உண்டாக ஜெபிப்போம்.

11 கல்லூரியில் படிக்கும் மாணவிகள் ஒரு நாளைக்கு 10 மணி நேரம்வரை உபயோகிக்கும் ஸ்மார்ட் போன் அடிமைத்தனத்திலிருந்து வெளிவரவும், படிப்பில் கவனம் செலுத்தி படிக்கவும் ஜெபிப்போம்.

12 ஒரு நாளைக்கு 3 மணி நேரத்திற்கும் அதிகமாக ஸ்மார்ட்போன் பயன்படுத்துவதால், முதுகு வலி போன்ற பிரச்சனைகளை எதிர்கொள்ளும் இளம்வயதினர் விடுதலைபெற ஜெபிப்போம்.

13 வீடியோ கேம்களுக்கு அடிமையாகி மனநிலை பாதிக்கப்பட்டுள்ள இளம் வாலிபர்களின் எதிர்காலத்தைக் கர்த்தருடைய கரத்தில் ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம்.



14 ஸ்மார்ட்போன் பயன்படுத்துவதால், சிறுவயதிலேயே பார்வை குறைபாடுகளுடன் காணப்படும் ஒவ்வொருவருக்கும் தேவன் நல்ல பார்வை கொடுக்க ஜெபிப்போம்.

15 செல்போன் பயன்படுத்தும் 14 முதல் 18 வயதான இளம் வாலிபர்கள் சுமார் 38% பேர் தொராசிக் முதுகெலும்பு வலியால் பாதிக்கப்பட்டுள்ள இவர்கள் மனம்திரும்பவும், இதிலிருந்து விடுவிக்கப்படவும் ஜெபிப்போம்.

16 செல்போன்களினால் ஏற்படும் தீமைகளைக் குறித்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்படுத்த அரசு முன்வர ஜெபிப்போம்.

17 இந்தியாவில் சராசரியாக தினமும் 80 கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கொலை வெறியின் ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

18 ஒரு ஆண்டில் மட்டும் 29 ஆயிரத்து 193 பேர் கொலை செய்யப்படுவதாகவும், உத்தரப் பிரதேசத்தில் அதிக வழக்குகள் பதிவு செய்யப்படுவதாகவும் ஆய்வறிக்கை கூறுகிறது. இந்த கொலை சம்பவங்கள் தடுக்கப்பட ஜெபிப்போம்.

19 வன்முறை மற்றும் கொலை சம்பவங்கள் குறைந்திடவும், இரட்சிப்பின் சுவிசேஷம் தீவிரமாக அறிவிக்கப்பட்டு குற்றச்செயல்கள் குறைக்கப்படவும் ஜெபிப்போம்.

20 30-45 வயதுக்குட்பட்டவர்களில் 38.5% பேரும், 18-30 வயதுக்குட்பட்டவர்களில் 35.9% பேரும், 45 வயதிற்கு மேற்பட்டவர்களில் 25.6% பேரும் கொல்லப்படுவதால், நம் தேசத்தின் இளவயதினர் மத்தியில் தற்கொலைகள், கொலை சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. இவை தடுக்கப்பட ஜெபிப்போம்.

21 நம் தேசத்தின் இளைஞர்கள் ஒருவரையொருவர் கொலை செய்து தங்களையும், தங்கள் வாழ்க்கைகளையும் அழித்து கொள்ளும் துயரநிலை மாறிட மன்றாடி ஜெபிப்போம்.

22 நம் தேசத்தின் ஜனங்களுக்குள் கொலை வெறியைத் தூண்டி மனிதர்களின் இரத்தங்களை பூமியில் சிந்தப் பண்ணுகிற பொல்லாத கொலைவெறியின் ஆவிகள் அழிக்கப்பட ஜெபிப்போம்.

23 தேசங்களில் காணப்படுகிற வறட்சிகள் மாறி, மழை உண்டாக, வயல் நிலங்கள் ஆசீர்வதிக்கப்பட, நல்ல அறுவடையைக் காண, தட்பவெப்ப நிலை மாற்றத்திற்கு ஏற்றபடி, ஒவ்வொரு விவசாயிகளும் ஞானத்தோடு செயல்பட ஜெபிப்போம்.

24 வெப்பத்தினாலும் வறட்சியினாலும், ஜனங்களுக்கு வருகிறதான பெலவீனங்கள், உடல் சோர்வுகள், அசதிகள், மனஉளைச்சல்கள், தூக்கமின்மை போன்ற காரியங்கள் மாற ஜெபிப்போம்.

25 தேசங்களில் நடக்கிறதான யுத்தங்கள், தீவிரவாதச் செயல்கள், கலகங்கள் மாறும்படியாகவும், தேசங்களில் சமாதானம் உண்டாகும்படியாகவும் ஜெபிப்போம்.

28 இந்தியாவில் சராசரியாக ஒரு மணி நேரத்திற்கு ஒரு பெண் வரதட்சணைக் கொடுமையால் உயிரிழப்பதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. வரதட்சணை கொடுமை நம் தேசத்தை விட்டு முற்றிலும் ஒழிய ஜெபிப்போம்

29 2012ஆம் ஆண்டில், வரதட்சணைக் கொடுமை சம்பந்தமாக 8,233 சம்பவங்களை NCRD பதிவு செய்துள்ளது. வரதட்சணையை தூண்டுகிற ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

30 இந்தியாவில் ஒவ்வொரு 90 நிமிடங்களுக்கும் ஒரு பெண் வரதட்சணைக் கொடுமையால் எரிக்கப்படுகிறாள். நாள் ஒன்றுக்கு சுமார் 20 வரதட்சணை மரணங்கள் நடைபெறுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

31 இந்தியாவில் ஆண்டுதோறும் 6,000க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவாகி வருகின்றன. இந்த வழக்குகள் சீக்கிரத்தில் முடிக்கப்பட ஜெபிப்போம்.



# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில்
அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து
பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன்
அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த
ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1ST SUNDAY (5TH OCT)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road,
Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9442885315 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre,
Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2ND SATURDAY (11TH OCT)

**BANGALORE (3PM-5PM)**
World Revival Prayer Centre,
57/2 Thomasappa layout (Opp)
Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

## EVERY 2ND SUNDAY (12TH OCT)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**THANE (5PM - 7:30PM)**
R.P. Mangala High School
(Near Railway Station), Room No.10,
Opp. Bank of Maharashtra, Thane (East)
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School
(Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street,
North side of TPV Mill,
Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church, Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street, Salem Road,
Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto,
1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3RD SATURDAY (18TH OCT)

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center,
3818, 14th Cross, St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

## EVERY 3RD SUNDAY (19TH OCT)

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam 2.
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex,
#43/R4, Rajendra Nagar,
Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor,
Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**NALUMAVADI**
**(3PM -5:30PM)**
Tabernacle of God,
Nalumavadi
9442885315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
I.S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction,
Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (5PM TO 7PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4TH SUNDAY (26TH OCT)

**THIRUVALLUR**
**(3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor, 305/E,
Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI**
**(2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845, 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop]
41, K.Salai pudur Byepass Road,
Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**



# எழுப்புதலின் விதைகள்!




மிஷனெரி பயணம்: வில்லியம்

கடந்த மாதம், 33 ஆண்டுகளாக ஓயாமல் உழைத்து, மெஞ்ஞானபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 125 கிராமங்களில் நற்செய்திப்பணியை அறிவித்து, 54 கல்விக்கூடங்களையும் பல ஆலயங்களையும் கட்டி, திரளான ஜனங்களை ஆதாயப்படுத்தி கோதுமை மணியாக வீழ்ந்த ஜான் தாமஸ் அவர்களைப் பற்றிப் பார்த்தோம். இந்த மாதம் கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றின காலேப், மலைநாட்டை எனக்குத் தாரும் என்று ஜெபித்ததுபோல, ''உலகிலேயே அதிகக் கடினமானப் பணித்தளத்தை எனக்குத் தாரும், அங்கு உமக்கென்று ஊழியம் செய்வேன்'' என்று ஜெபித்த ஒரு அருமையான மிஷனெரியின் வாழ்க்கையைப் பார்ப்போம்.

**இளமைப் பருவம்:** 1782-ம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தில் தன்னுடைய பெற்றோருக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார் இராபர்ட் மோரிசன். அவர் சிறு வயதிலேயே மர அச்சுகளை உற்பத்தி செய்யும் கம்பெனியில் தனது தந்தைக்கு உதவி செய்து வந்தார். தேவபக்தியுள்ள தனது தந்தையின் மூலம் தனது ஓய்வு நேரத்தை வேதத்தைக் கற்பதில் செலவிட்டார். விளையாடுவதற்கு சிறிது நேரம் ஒதுக்கிவிட்டு, மற்ற நேரங்களைத் தனது சபைப் போதகரிடம் கிறிஸ்துவைக் குறித்தும், வேதபாடங்களை ஆராய்ந்து அறியவும் செலவழித்தார். 14 வயதில் இராபர்ட் பள்ளியை விட்டு வெளியேறித் தனது தந்தையின் தொழிலில் பயிற்சிப் பெற்றார்.

**அழைப்பு:** தனது 15-ம் வயதில், மனமாற்றம் அடைந்து அனுதினமும் கிறிஸ்துவுக்குள் வளர ஆரம்பித்தார். சில மிஷனெரி ஸ்தாபனங்களின் மாத பத்திரிக்கைகளை வாங்கி வாசிக்கும்போது, இயேசுவைப் பற்றி அறியப்படாத வெளி நாட்டவர்களுக்குத் தானும் ஒரு மிஷனெரியாகச் சென்று சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்ற பாரம் உண்டானது. தாயாரோ தான் உயிருடன் இருக்கும் வரை எங்கும் போகக் கூடாது என்று உறுதியாக இருந்தார். ஆனால் இவரோ தேவனின் வேலைக்காக ஜெபித்துக் கொண்டே இருந்தார். தனது 20-வது வயதில் தாய் மரித்துப் போனார். தாயின் மரணத்திற்குப் பிறகு, இங்கிலாந்து சென்று, 2 வருடம் மிஷனெரிப் பயிற்சி பெற்று, மிஷனெரியாகச் செல்ல அழைக்கப்பட்டதும் மிகவும் சந்தோஷமடைந்த மோரிசன், தன் குடும்பத்தாருக்கு அறிவித்தார். இங்கிலாந்து தேசத்திலேயே ஊழியத்திற்கான அதிக வாய்ப்புகள் இருக்கும்போது, அந்நிய தேசத்தில்போய் உன் வாலிப நாட்களை ஏன் வீணாக்க வேண்டும் என்று வார்த்தைகளால் சோர்வடையச் செய்தனர். அப்போது இராபர்ட் சீன தேசத்தைக் குறித்த பாரத்தைப் பெற்று அதற்காக ஜெபித்துக் கொண்டிருந்தார்.

1807-ம் ஆண்டு சீன தேசத்திற்கு அனுப்ப தீர்மானித்தபோது, கிழக்கிந்தியக் கம்பெனி இவரைச் சீன தேசத்தில் குடியேற அனுமதி தர மறுத்தது. எனவே அமெரிக்கத் தேசத்திலுள்ள மாநிலச் செயலாளரிடம் அறிமுகக் கடிதம் ஒன்றைப் பெற்றுக்கொண்டு, அமெரிக்கக் கப்பலில் சீன தேசத்திற்கு புறப்பட்டார். ஏழு மாதப் பிரயாணத்திற்குப் பிறகு 1807-ம் ஆண்டு செப்டம்பர் மாதம், சீனாவில் உள்ள கேன்டன் என்ற பகுதிக்கு வந்து சேர்ந்தார். கேன்டனில் இருந்த அமெரிக்கக் கவுன்சில் இவரை ஏற்றுக்கொண்டது. ஆனால் கிழக்கிந்தியக் கம்பெனியர் இவரைக் கண்காணிக்க ஆரம்பித்தனர். ஆகவே மோரிசனுக்கு சீன மொழியைக் கற்பது கூட அதிக இரகசியமாகச் செய்யப்பட வேண்டியதாயிருந்தது.



சுவிசேஷத்தை வெளிப்படையாகப் பிரசங்கிக்கக் கூடாது என்ற தடை கேன்டனில் இருந்த போதும், மோரிசன் தனது நேரத்தை வீணடிக்காமல், இரண்டு ரோமன் கத்தோலிக்க நண்பர்களைக் கண்டுபிடித்து அவர்களிடம் சீன மொழியைக் கற்றுக்கொள்ளச் சென்றபோது, "உமக்கு எங்கள் மொழியைச் சொல்லித் தருவதால் எங்கள் உயிருக்கு ஆபத்து உண்டு, அதிகாரிகள் எங்களைக் கைதுசெய்து கொடுமைப் படுத்துவதற்கு முன், நாங்களே எங்களை மாய்த்துக்கொள்ள எப்போதும் விஷம் வைத்திருப்போம்'' என்றனர். மொழியை நன்கு கற்றுக் கொண்டு முதலில் சீன அகராதியை உண்டுபண்ணி இரகசியமாக வேதத்தையும் மொழிபெயர்த்தார். கேன்டன் வந்து 18 மாதத்திலேயே சீன மொழியில் அகராதியை **(Dictionary)** ஆயத்தம்பண்ணி தந்த மோரிசனை கிழக்கிந்திய கம்பெனியார் பாராட்டி அவருக்கு மொழிபெயர்ப்பாளர் என்ற பதவியைத் தந்து மாத வருமானமும் தர முன்வந்தனர்.



**குடும்ப வாழ்வு :** சீன தேசத்தில் வாழ்ந்து வந்த இங்கிலாந்து மருத்துவரின் மகளான மேரி மார்டேனை திருமணம் செய்துகொண்டார். சீன தட்பவெப்ப சூழ்நிலையில் மேரி அதிக சுகவீனமடைந்து, 1815-ம் ஆண்டு தனது இரண்டு சிறு குழந்தைகளுடன் இங்கிலாந்துக்கு போக வேண்டிய சூழ்நிலை வந்தது. மோரிசன், தன்னுடைய முழு நேரத்தையும் ஊழியத்தில் செலவிட்டார். ஆறு வருடப் பிரிவுக்குப் பிறகு மேரியும் பிள்ளைகளும் சீனா வந்தபோதிலும் சிறிது நாட்களிலே மேரி சுகவீனமடைந்து மரித்துப்போனார். 9 வயது மகள் ரெபேக்காவும், ஏழு வயது மகன் ஜானும் மறுபடியும் இங்கிலாந்து தேசத்திற்குக் கல்விக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். குடும்ப வாழ்வில் பல கஷ்டங்களையும், மனவேதனையையும் அனுபவித்த மோரிசன், பிள்ளைகள் போனபிறகு, தனிமையில் வேதத்தை மொழிபெயர்ப்பதில் முழு கவனத்தையும் செலுத்தினார்.

**ஊழியம் :** சீன மொழியில் அவரது அறிவுத்திறன் வெகுவாக விருத்தியடைந்தது. சுவிசேஷத்திற்கு சீனாவில் முதல் மிஷனெரி என்று இவர் கருதப்பட்டாலும் பகிரங்கமாகச் சுவிசேஷம் சொல்ல முடியவில்லை. கிழக்கிந்தியக் கம்பெனியார் இவரது சுவிசேஷப்பணிக்கு தடையாக இருந்தபோதிலும், 1815-ம் ஆண்டு, சீன மொழியில் புதிய ஏற்பாட்டை, மொழிபெயர்த்து, வெளியிட்டபோது, கம்பெனியார் மோரிசனை வேலை நீக்கம் செய்தனர். பல அச்சுறுத்தல்களும், எதிர்ப்புகளும் தடையாக இருந்த போதிலும், 1824-ம் ஆண்டு வேதத்தை முழுவதும் சீன மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

இங்கிலாந்து தேசத்திற்கு விடுமுறைக்குச் சென்று, இரண்டு வருடம் அங்குள்ள பல பகுதிகளில் சீன தேசத்தின் தேவையைப் பகிர்ந்துகொண்டபோது, மிஷனெரியாக வர முன் வந்தவர்களுக்குச் சீன மொழியைக் கற்றுக் கொடுத்தார். சீனப் பெண்கள் மத்தியில் கிறிஸ்து அறிவிக்கப்படவேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறி தனது வீட்டிலேயே ஊழிய வாஞ்சையுள்ள பெண்களுக்குச் சிறப்பு வகுப்புகளை நடத்தினார். அந்த வகுப்பில் பயின்ற அநேகர், சீனாவிற்கு மிஷனெரியாகச் சென்றனர். 1826-ம் ஆண்டு மறுபடியும் சீனா வந்து, கேன்டன் பகுதியில் தனது பணியைச் செய்தார். சில கிறிஸ்தவ இலக்கியங்களையும் சீன மொழியில் மொழி பெயர்த்தார். கம்பெனி வேலை, ஊழியம் என்று அதிக வேலைப் பளுவினால், பெலன் இழந்து, சுகவீனப்பட்டு 1834-ம் ஆண்டு இராபர்ட் மரித்துப் போனார். சீனாவில் 25 வருடம் கடினமாகப் பணி செய்தும், சிலரை மட்டுமே கிறிஸ்துவுக்குள் வழிநடத்த முடிந்த போதிலும், வேதத்தைச் சீன மொழியில் மொழிபெயர்த்து அழியாப்பணி செய்தார்.

**அன்பான வாலிபர்களே...! கிறிஸ்துவுக்காகத் தங்கள் குடும்பத்தை, உறவுகளை, அவ்வளவு ஏன் உயிரைக்கூட துச்சமாக எண்ணிய இராபர்ட் போன்ற மிஷனரிகளால் தான், இருண்டு போயிருந்த பல தேசங்களுக்கு சுவிசேஷத்தின் ஒளி எடுத்துச் செல்லப்பட்டது. இவர்கள் கர்த்தருக்காக வாழ்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்து, சுவிசேஷத்தின் விதைகளாக மண்ணில் மடிந்ததால் தான் இன்றைக்கு நம்மைப் போன்ற அநேகர் கிறிஸ்துவின் அன்பை அனுபவித்து வருகிறோம். இவர்களைப் போலக் கடினமான பணித்தளத்திலும் கிறிஸ்துவுக்காக ஒரு கூட்ட ஜனத்தைப் பரலோகத்திற் கென்று ஆயத்தம் செய்ய நம்மில் எத்தனை பேர் ஆயத்தம்.??**

# செய்திகள்!




## இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கினர் இதய நோயால் உயிரிழப்பு: ஆய்வு அறிக்கை வெளியீடு!

இந்தியாவில் ஏற்படும் மரணங்களில் மூன்றில் ஒரு பங்கினர் இதயம் சார்ந்த நோய்களால் உயிரிழப்பதாக ஆய்வில் அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. 2021 முதல் 2023 ஆண்டு வரையிலான காலகட்டத்தில் இந்தியாவில் நிகழ்ந்த மரணங்களுக்கான காரணங்கள் குறித்த ஆய்வு அறிக்கையை இந்திய பதிவாளர் வெளியிட்டுள்ளார். அதில், தொற்றா நோய்களால் 56.7% பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில், தொற்று நோய், தாய்வழி, பிறப்பு, ஊட்டச்சத்து குறைப்பாட்டால் 23.4% உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதில் அதிர்ச்சியூட்டும் தகவலாக 31% பேரின் மரணங்கள், இதய நோய் சார்ந்த பிரச்சனைகளால் நிகழ்ந்துள்ளது. அதனை தொடர்ந்து சுவாச தொற்றுகளால் 9.3% பேரும், உடலில் திசுக்களில் ஏற்படும் கட்டிகள் தொடர்பாக 6.4% சதவீதம் பேரும், சுவாச பாதிப்புகளால் 5.7% பேரும் உயிரிழந்துள்ளனர். மேலும் ஜீரண மண்டல நோய்களால் 5.3% பேர், காய்ச்சலால் 4.9% பேர், சாலை விபத்து, காயங்களால் 3.7% பேர், நீரிழிவு பாதிப்பால் 3.5% பேர், பிறப்புறுப்பு மற்றும் சிறுநீர் மண்டல உறுப்பு நோய்களால் 3% பேர், தெளிவான காரணம் இல்லாத மரணங்கள் 10.5% பேர் உயிரிழந்திருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

15 முதல் 29 வயதுடையவர்களின் இறப்புக்கு உள்நோக்கத்துடன் காயம் ஏற்படுத்துதல், தற்கொலை ஆகியவை பொதுவான காரணங்களாக உள்ளன. தெளிவான காரணம் தெரியாத மரணங்கள் பெரும்பாலும் 70 மற்றும் அதற்கு மேற்பட்ட வயது உடையவர்களுக்கு ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

- செப்டம்பர் 6, 2025 தினகரன்.

## காசாவில் குழந்தைகள் எதிர்கொள்ளும் துயரம்... 21,000 குழந்தைகள் இயல்பான திறனை இழந்துள்ளன: ஐ.நா. வேதனை!!

காசா மீதான இஸ்ரேல் தாக்குதலால் இதுவரை சுமார் 21,000 குழந்தைகள் பல இயல்பான திறன்களை இழந்து மாற்றுத்திறனாளிகளாய் உள்ளனர் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான ஐ.நா. அமைப்பு இந்த தகவலை தெரிவித்துள்ளது. போரின் காரணமாக 40,500 குழந்தைகள் படுகாயமடைந்துள்ளதாகவும், அவர்களில் சரிபாதி குழந்தைகள் கேட்கும், பேசும், பார்க்கும் திறன் உள்ளிட்ட திறன்களை இழந்துள்ளதாகவும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஊட்டச்சத்து காரணமாக காசா குழந்தைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இதே நிலை நீடித்தால் 2026 ஜூன் மாதவாக்கில், சுமார் 1,32,000 குழந்தைகள் உயிரிழக்கும் அபாயம் உள்ளதாகவும், ஒருங்கிணைத்த உணவு பாதுகாப்பு குறித்து கண்காணிக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது. காசா மீதான தாக்குதல் தொடங்கியதில் இருந்து இதுவரை 63,700க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதாகவும், 1,61,000க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் பிராந்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. - செப்டம்பர் 4, 2025 தினகரன்.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

தகவல்: எப்சிபா




# கிறிஸ்தவம்

Hi சகா, சகி!

கிறிஸ்தவம் அன்றும் இன்றும் என்ற தலைப்பின் கீழ் உங்களை மறுபடியும் சந்திக்க செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம். இம்மாதம் இதயத்தில் இறை வார்த்தை என்ற தலைப்பில் ஒப்பீடு செய்யலாம். விடுமுறை நாட்களில், எனது பாட்டி தாத்தா வீட்டிற்கு செல்லும்போது எனது தாத்தா வசனங்களை மனப்பாடம் செய்யச் சொல்வார். அப்பொழுது எனக்குக் கஷ்டமாகத் தெரிந்தது. இன்று திரும்பிப் பார்த்தால், அந்தச் சிறிய ஒழுக்கத்திற்கு பின்னால் எவ்வளவு பெரிய மகத்துவம் மறைந்திருந்தது என்று இப்பொழுது புரிகிறது.

நான் சிறுவர்கள் மற்றும் வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்து வருகிறேன். அதில் சிறுவர்கள் எளிதாக வசனங்களை மனப்பாடம் செய்கிறார்கள். சில நேரங்களில் போட்டியிலும் பங்கேற்று எவ்வளவு வசனங்கள் என்றாலும் சுலபமாகச் சொல்லிவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் வாலிபர்களாகும்போது, அந்த வசனங்கள் மனதிலிருந்து மங்கிப் போகின்றன.

## மத்தேயு என்னும் அக்கால இளைஞன்

அன்றைய இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டாக, மத்தேயு என்னும் இளைஞன், வேத வசனங்களை நன்றாய் அறிந்திருந்தார். எனவே அங்கே இயேசு செய்யும் காரியங்களைப் பார்க்கப் பார்க்க அவருக்குப் பழைய ஏற்பாட்டின் வசனங்கள் நினைவிற்கு வந்தன. அதனால்தான் 60க்கும் மேற்பட்ட வசனங்களைப் பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காட்டி தனது மத்தேயு புத்தகத்தில் எழுதி இருக்கிறார். அதனால் தான் மத்தேயு புத்தகம் புதிய ஏற்பாட்டில் முதல் புத்தகமாகவும் பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைக்கும் புத்தகமாகவும் இருக்கிறது. இது ஒருவிதத்தில், ஒருவரின் வசன அறிவின் பலனே!


## இன்றைய சவால்

இன்றைய இளைஞர்கள் வேறு உலகில் வாழ்கிறார்கள். கவனச்சிதறல்கள் அதிகம் (கைபேசி, சமூக வலைத்தளம், படிப்பு, வேலை). அந்தச் சூழலில் வசனம் மனதில் நிலைத்திருக்க செய்வது சிரமம்.

ஆனாலும் சத்தியம் மாறாது.

இருதயத்தில் எழுதப்பட்ட வேதத்தைச் சத்திய ஆவியானவர் எடுத்துச் சொல்லி, நம்மை நல்வழிப்படுத்துவார்.

## மனப்பாடம் செய்யும் வழிகள்



சில முக்கியமான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து மனப்பாடம் செய்வது சிறந்தது: உதாரணமாக ரோமர் 8, யோவான் 15, மத்தேயு 5:3-12. மேலும், பெர்க்மான்ஸ் ஐயாவின் பாடல்கள் வசன அடிப்படையில் எழுதியிருப்பதை நினைவில் கொள்ளுங்கள். பாடலாகப் பாடினால், மனதில் வசனம் வேகமாகவும் ஆழமாகவும் பதியும்.

## தேவனின் வாக்குறுதி

எரேமியா 31:33-இல் தேவன் சொல்கிறார்:

"நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்."

அந்த வாக்குறுதி அன்றைய இளைஞர்களுக்கும் பொருந்தியது; இன்றைய இளைஞர்களுக்கும் பொருந்துகிறது. வசனம் நம்முள் எழுதப்பட்டால், அது ஒரு தலைமுறையை மட்டுமல்ல, வருங்கால தலைமுறையையும் மாற்றும் சக்தியாக இருக்கும்.

**எனவே வேதத்தை நேசியுங்கள்! தினமும் அதை சுவாசியுங்கள்!!**

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 09 -2025
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.


# வாலிபர் உலகம்

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாக வாலிபர் உலகம் என்ற மாதாந்திர பத்திரிக்கை 7 மொழிகளில் வெளியிடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் வாலிபர்களுக்கு ஏற்ற சுவாரஸ்யமான தலைப்புகளில் மோகன் அங்கிள் செய்தி. தினந்தோறும் ஜெபிக்க ஜெபக்கையேடு. வாலிபர்களின் சாட்சிகள். ஆலோசனை பகுதி. எழுப்புதல் செய்திகள் போன்றப் பல கட்டுரைகள் வெளி வருகின்றன.

மாதந்தோறும் இப்பத்திரிக்கை உங்கள் இல்லத்திற்கே வர வேண்டுமானால் உங்களுக்குத் தேவையான மொழியை Tick செய்து (✓) இந்தப் பகுதியைப் போட்டோ எடுத்துக் கீழ் கொடுக்கப்பட்டுள்ள whatsapp எண்ணுக்குத் தெரியப்படுத்தவும்.

**Whatsapp: 97509 55547**

## சந்தா விவரம்

ஒரு வருட சந்தா
ரூ. 100/-
ஆயுள் சந்தா ரூ. 1000/-
(15 வருடங்கள்)
வங்கி அல்லது வெப்சைட் மூலம் செலுத்தலாம்





- Tamil ☐
- English ☐
- Hindi ☐
- Malayalam ☐
- Telugu ☐
- Kannada ☐
- Bengali ☐

நீங்கள் தேர்ந்தெடுக்கும் மொழி...



## Bank Detail

A/C Name: JESUS REDEEMS YOUTH MINISTRY
A/C No: 054100710400515
Bank: TAMILNAD MERCANTILE BANK LTD.,
Branch Code: 000054
IFS Code: TMBL0000054
MICR Code: 627060021
SWIFT Code: TMBLINBBTUT

youth.jesusredeems.com என்ற வெப்சைட் மூலமாகவும் செலுத்தலாம்.

*Youth World Magazine*

சந்தா செலுத்தியபின் உங்களது முழு முகவரி, பின்கோடு மற்றும் தொலைபேசி எண்ணைத் தெளிவாக அனுப்பவும்.